www.tamilarangam.net

# சர்வதேசதமிழர்

1998 Vol.5 Nr.8



சர்வதேசதமிழர் வாசகர்கட்கு
ஈழத்தமிழர் சார்பில் நத்தார்,
புதுவருட வாழ்த்துக்கள்!
அன்புடன்...செல்வி.க.ஜனார்த்தனி







யோகா-ராம்பாஸ்கர்



குமுறல்கள் வெளியீட்டில் தேவகடாட்சத்துடன் தாமரை
த்தீவானும்(நூலுடன்) நண்பர்களும்! -திருகோணமலை



நோர்வேகலைஞர் அன்ரன்டேவிட்,கங்கைஅமரன்

GOD
JUL
OG
GODT
NYTT
ÅR



ஆசியஇரவில் பரிசு!

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ: தி.கிருபா, கு.பாலதாஸ் பாலேந்திரா பேர்கன்: என்.ஜெயதரன்,மமகான் சிவகாந்தன் துரோண்கைம்: தர்மா
ஸ்ரவங்கர்: அ.பாஸ்கரன்: முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்: ம.பஸ்ரியன் ஏககண்ட்: பொன்.சிவா: துறம்சோ: கே.சிவராஜா:
வார்டோ: குகனெறியப்பன்: போர்லவோக்:ஐ.ரிசவீந்திரன் போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் பிறத்வோக்: குமார் கிறி.கண்ட்:தேவராஜா

# சர்வதேச தமிழர் சந்திப்புக்களம்:

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

சர்வதேச தமிழர் சஞ்சிகையை
தமிழீழ தேசியத்தலைவர் அவர்கட்கு
தவறாமல், இயக்கதொண்டர்களுக்கு
ஊடாக அனுப்பிவருவதை அறியத்
தருகிறேன்.எமது பிரதேசத்தில் 18-30
வயதுவரையான மாவீரர்களான பல
இளைஞர்கள்,கன்னியர் எவ்வளவோ
பேர் தம்முயிரை தியாகம் செய்து
தமிழீழவிடுதலைக்காக அர்ப்பணம்
செய்துவருதற்கு எம்அஞ்சலிகளை,சர்
வதேசதமிழருடாக தெரிவிக்கிறோம்.

**ஒரு வாசகி, வன்னிப்பிரதேசம்.**

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

வணக்கம்!சர்வதேசதமிழர் இதழினை
மறுமலர்ச்சிதிராவிடமுன்னேற்றக்கழக
பொதுச்செயலாளர் வைகோ அவர்க
ளுக்கு தொடர்ந்து,அனுப்பிவருகின்றீர்
கள்.அதற்காக நன்றியைத்தெரிவித்து
க்கொள்கிறேன்.வை.கோபால்சாமி
என்ற பெயரினை வைகோ என மாற்
றி.அரசிதழில் பதிவுசெய்துள்ளோம்.
எனவே அவர் பெயர் மற்றும் இல்ல
முகவரி மாற்றத்தை தாங்கள் பதிவு
செய்து கொண்டு,புதிய முகவரிக்கு
சர்வதேசதமிழரை தொடர்ந்து அனுப்
பி வைத்திடுமாறு தங்களை அன்புட
ன் வேண்டுகிறேன்.நன்றி. அன்புள்ள,

**ப.அருணகிரிநாதன்,த.உதவுனர்
வைகோ,பா.உ., தாயகம்,141
Rukmani Lakshmipaty rd,Egmore
Chennai-8, India Tel.44.8572661,62
VAIKO,Editor-Sangoli,AL BLK,Nr67
4st,11mainrd,annanagar,chennai40**

(உலகத்தமிழர்கட்சிகள்,அமைப்புகள்
சங்கங்கட்கு 1994இலிருந்து,செய்தி-
கருத்துபரிமாற்றம் கருதி சர்வதேச
தமிழர் இலவசமாக அனுப்பப்பட்டு
வருகிறது.தங்கள் வெளியீடுகளை
சகலகட்சிகளும்,அமைப்புகளும் எமக்
கு,அனுப்பினால் தொடர்புவலுப்படும்.
புதுஆலோசனைகள்,யுக்திகளை நாம்
பகிரலாம்.ம.தி.மு.க.வுக்கும்,வைகோ
அவர்கட்கும்,எம் வாழ்த்துக்கள்!ஆர்)

**அன்புச் சகோதரா,**

புலம்பெயர்ந்தாலும் தமிழன்னை
புகழைத் தளம் பதிய வைத்திடும்
இளம்தமிழரான தங்கட்கு உளமார்ந்
த நன்றிகள்! சர்வதேசதமிழர் இதழ்
களுத்துறை தடுப்புமுகாமிலுள்ள,
தமிழ்அரசியல்கைதிகள் மத்தியிலும்
பலத்தவரவேற்பை பெற்றுள்ளதென்ப
தை தெரிவிப்பதில் பெருமகிழ்வு
அடைகிறேன்.30.12.94ல் கொழும்பு
4ம்மாடி புலனாய்வுத்துறையினரால்
கைதுசெய்யப்பட்டு,43மாதங்களை
இருண்டசிறைவாழ்வில் கழித்துவிட்டு
கடந்த 18.7.98ல் விடுதலையானேன்.
அங்கும் தமிழ்அரசியல்கைதிகளின்
அடிப்படைத்தேவைக்கு குரல்கொடுத்
து வெற்றிஅடைவதிலேயே கழித்துள்
ளேன்.சிலருக்கு சிறைவாழ்வு சம்பவ
மாகலாம்.ஆனால்,நமக்கதுசரித்திரம்!
பயங்கரவாததடை சட்டமூலம் வீணா
க சிறைவைக்கப்பட்டிருந்த ஆயிரக்க
ணக்கான தமிழர்கட்காக பத்திரிகை
கள் மூலம் விளக்கியும்,விடுதலைக்
காக சாகும்வரை உண்ணாவிரத
போராட்டம் நடாத்தியும்-விரும்பியது
கிடையாவிடிலும்,கிடைத்ததைவிரும்பு!
-எனும் முதுமொழிக்கேற்பபொதுநலத்
தொண்டில் கழித்தோம்.
சிங்களஅரசோ,தமிழ்கட்சிகள்,இயக்க
ங்கள்,தலைவர்களோ சிறையில்வாடு
ம் அப்பாவித்தமிழர்கள்மீது அக்கறை
காட்டுவதில்லை!என்பதை புலம்பெய
ர்ந்தநாடுகளிலுள்ள தமிழர்கள் உண
ர்ந்துகொள்ளவேண்டும். 12.12.97ல்
சிங்களஇனவெறிபிடித்த கைதிகளால்
தமிழ்பேசும் ஜனாப்.எம்.ஜெகான்,காந்
தன்,சிவா எனும் அரசியல்கைதிகள்
படுகொலை செய்யப்பட்டனர்.தமிழ்
கட்சிகள் அனுதாபவார்த்தைகளை
அள்ளிவீசியதுடன் அடங்கிவிட்டனர்.
சர்வதேசதமிழர் மூலம் ஒரு முக்கிய
வேண்டுகோளை விடுக்கிறேன்.
சிறையில் இறந்த மூவர் சார்பிலும்
ஒரு நிதியம்தொடங்கப்பட்டு,அவர்கள்
குடும்பத்திற்கும்,மற்றும் சிறையில்
வாடும் ஏழைத்தமிழர்குடும்பத்திற்கும்
உதவுமாறு இரக்க உள்ளங்களை
வேண்டுகிறேன். மார்கழி 12ல் புலம்
பெயர்தமிழர்கள்,அவர்களை நினைவு
கூர்ந்து அஞ்சலி செலுத்துமாறும்,
அன்புடன் வேண்டுகின்றோம்.

**டாக்டர். வே. தவயோகநாதன்**
18-3, இஸ்மாயில் லேன்,மாத்தளை

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

ஒரு உதைபந்தாட்டஅணியின் 11வீரர்
களும் வெற்றிபெற்றால் அவர்களது
நாடே வெற்றிபெற்றதுபோல் மகிழும்.
அதுபோல் தாங்கள் செய்யும்,சேவை
உலகம் பூராவுமுள்ள தமிழர்களை
ஒன்றிணைப்பதால் அதன் பெருமை
முழுவதும் ஈழமண்ணுக்கே சாரும்!
சர்வதேசதமிழர் புத்துயிர்பெற்று,நடுநி
லையாக எழுதிவருவது வரவேற்கத்
தக்கது கடமையைத் தொடர்க!
உண்மைக்குமுன்னால் நடுநிலைமை
என்பது இல்லை! என எழுதிவரும்
சிலர் தம்பக்கச் சார்பாகவே இயங்கி
வருகின்றனர்.இது கவலை தருவது!
இத்துடன் சந்தாவும் அனுப்பி தொடர்
ந்தும் ஆதரவுதரவிரும்புகிறேன்.ஹமர்
பெஸ்டில் அகாலமரணமடைந்த மணி
வண்ணனின் செய்திஅறிந்து கவலை!

**ஐ.ரி.ரவீந்திரன், B.13,9860Kiberg**

**அன்புடையீர்,**

வணக்கம்.சர்வதேசதமிழர் கிடைத்து
மகிழ்ந்தேன்.நல்ல இதழொன்றை
வெளியிடும் உங்களைப்பாராட்டவும்
நன்றி தெரிவிக்கவுமே இம்மடல்!
உங்கள் சீரிய,நன்முயற்சி வெல்க!
அறிவியக்கப்பேரவை தலைவரும்,புது
டில்லி பல்கலைக்கழக முன்னாள்
பேராசிரியருமான சாலை இளந்திரை
யன் 4.10.98ல் சென்னையில் காலமா
னசெய்தியை வருத்தத்துடன் அறியத்
தருகிறேன்.பலநூல்களை எழுதியும்
1974ல் முதல் உ.த.ப.இயக்க தலை
வராயும்,தமிழீழத்தமிழர் துயர்துடைக்
க தமிழகஅரசு,மத்தியஅரசை விடாது
வலியுறுத்தியும்,வந்த துணிவாளர்
இவர்!இறந்தபின்பும் தம்முடலை தமி
ழக மருத்துவமனைக்கு தந்துள்ளார்.
12.9.98ல் கல்வித்திருநகரான ஆக்ஸ்
போட்டில் திராவிடநல மேம்பாட்டுக்
கழகம்,திராவிடத்தலைவர்கள் பற்றிய
கருத்தரங்கம் ஒன்றை நடாத்தியது.
தமிழறிஞர் வித்துவான் வேலனின்
பவளவிழா,கிழக்குலண்டன்,மனர் பாக்
தமிழ்இல்லத்தில் சிறப்புற நடைபெற்
றது.ஞானவிளக்கு போன்ற பலநூல்
களை எழுதியவர்.கம்பராமாயண ஈடு
பாடுகொண்ட,இவர் அயோத்தியாகா
ண்ட பலபகுதிகட்கு உரைஎழுதினார்.
இலங்கை கல்விபிரிவில் ஆலோசக
ராய் பலஆண்டு பணிபுரிந்தவர்!

**அரங்க.முருகையன்உ.த.கழகம்
Universal Tamil Assn,3Hastings rd,
Ealing,London W13 8QY, U.K.**

**மதிப்பார்ந்த ஆசிரியருக்கு,**

இத்துடன் குமுறல்கள் எனும்,எனது
2.வது சிறுகதைத்தொகுதி நூலைத்
தங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.
காலக்கீறல் நூல்வருமானம் பார்வை
யற்ற மாணவர் கல்விமேம்பாட்டுநிதி
க்கு(1996ல்)வழங்கப்பட்டது.தற்போ
தையநூல்வருமானத்தை பாதிக்கப்ப
ட்ட மாணவர் கல்வி மேம்பாட்டிற்கு
வழங்க எண்ணியுள்ளோம்.
மாவட்டரீதியாக பாதிக்கப்பட்டவர்
எண்ணிக்கையை பார்க்கையில் அம்
மால்,சேர்த்ததொகை(1லட்சம்)யானை
தீனிக்கு சோளப்பொரியாயுள்ளது.
அனைத்துலகதமிழ்மக்கள் தலைவிதி
யில் ஈழதமிழர்தலைவிதியும் சுமத்தப்
பட்டிருப்பதால்,உதவவேண்டுகிறோம்.
சகலதொழில்துறைகளும் பாதிக்கப்ப
ட்டிருப்பதால் கல்வியே முன்னேற்றத்
துக்கு ஒரேவழி எனஅறிந்து நம் மா
ணவர் அதீதமுன்னேற்றம் காண்பிக்கி
ன்றனர்.அதற்கு பொருளாதாரநிலை
தடையாக அமைகின்றது.ஈழத்தமிழர்
நிர்க்கதியை தீர்க்க உதவும்படி மான
சீகமாக வேண்டுகிறோம்.இந்நூல் ஈழ
தமிழர் இன்றையநிலையை காட்டுவ
தோடு,வருமானமும் அத்தியாவசிய
பணிக்கு உதவுகிறது! எனலாம்.

**கனகசபை தேவகடாட்சம்,
45/23,Teachers Square,Orrs`hill,
Trincomalee,Srilanka Tel 21425**

**அன்பின் ஆசிரியருக்கு,**

சர்வதேசதமிழர் சஞ்சிகையை வாசித்
து மகிழ்வும்,அறிவும் பெறுகிறோம்.
தமிழர் வாழும் இடங்களெல்லாம்
சர்வதேசதமிழருக்கு வாசகர்கள்
இருப்பதுகண்டு நோர்வேவாழ் தமிழர்
கள் அனைவரும் பெருமையும்,பெரு
மகிழ்ச்சியும் அடைகிறோம். தங்கள்
சேவை மேன்மேலும் பெருகவும்,தமி
ழர் குரல்கள் உலகமெங்கும் ஓங்கி
ஒலிக்கவும் என் நல்வாழ்த்துக்கள்!

**ராஜபிரதீபன், B94,5780 kinsarvik**

**அன்பு ஆசிரியநண்ப,**

மலையகதமிழ்மக்கள் இலங்கைவந்து
200வருடங்களாகிறது.இவர்கள்பற்றிய
ஆய்வுகள்,தகவல்கள்,ஆக்கஇலக்கிய
ங்கள்,ஆய்வுக்கட்டுரைகள் அச்சில்
வெளிவந்தபோதிலும்,ஆவணப்படுத்த
ப்படவில்லை.1996ல், மலையகதமிழா
ராய்ச்சி மாநாடு,ம.மா.கல்விஅமைச்
சால் நடாத்தப்பட்டு நூலும்வெளியிட
ப்பட்டது.மலையக தமிழராய்ச்சி செய
லகமும் அமையவுள்ளது.ஆலோசகர்:
பேராசிரியர்.கா.சிவத்தம்பி,இணைசெய
லர்கள்: சாரல் நாடன்,அந்தனி ஜீவா.

**அந்தனி.ஜீவா pb32,KandySrilanka**



கோப்பன: புருசோத்தமராஜன் பாரும்: முகணேசராஜா சுந்தரலிங்கம் அஸ்கர்: சிவராஜா நேதனஸ்எலிஸ்ரன் நூர்பியுறெய்ட்: சுமதி
ட்றம்மன்: மு.மணிவண்ணன் ரொன்ஸ்பேக்: சிமணி ஸ்திறின்சர்வேந்திரன் புஸ்பா பிறை: தெவீரசுத்தி அல்தா: பிமகேஸ்வரன்
மாட்ன்ஸ்பியுறோறாரவீந்திராதேவி ஸ்கொட்ஜகிகலாநிதி ஒலகண்ட்:திரு.பொன்னுதுரை பிறட்றிக்ஸ்ராட்: பென்சமின் ராஜா பிலிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்கோறர்: சிவராஜா கல்வோக்: கனகசிங்கம் ,கூல்: கஜேந்திரன் ,சூர்வார்:மனோகரன்,பகீரதன் ,ஒஸ்: கிருபா ,கூல்:யோகராஜா
பிரிட்டன்:சோ.கனகசுந்தரம், ராஜி சந்திரன்,டாக்டர்.செ.ஆனந்தவரதன்;ந.பாலமுரளி,தவமணி.மனோகரன்.ஆறுமுகம் ,செ.நாகேந்திரன்
கனடா: கனகேஸ்வரி நடராஜா, எஸ்.திரு, ம.மகிந்தன்;நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,சு.பாஸ்கரன்,பின்லாந்த்: இ.சிவலிங்கம் வி.சிவரூபன்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி,வல்லிக்கண்ணன், தி.பிரசாந்த்; மைசூர்: குபுகழேந்தி பழனி: டாக்டர் இளங்கம்பன்

சர்வதேசதமிழர் 1998
ஆசிரியர் கருத்து தொ.5, இ.8

## தமிழர்களும் ஐக்கியதேசியகட்சியும்!

இலங்கையில் தமிழர்கட்சிகள் தம் பெயரில்
தமிழ்,தமிழர்பெயர்களை தவறாமல் கொண்டி
ருந்தபோதும் நடைமுறையில் தேசியரீதியில்
ஒத்துப்போகும் வழிமுறைகளை முயற்சிபண்
ணி இணக்கம் காண பலவாறு முயற்சித்தன.
ஆனால் தம் கட்சிப்பெயர்களில் சிங்களம்
என்ற போர்வையை போர்க்காமலேயே இரு
பிரதான சிங்களக்கட்சிகளான ஐக்கியதேசிய
கட்சியும்,சுதந்திரக்கட்சியும் தம்மை சகலரை
யும் ஒருங்கிணைக்கும் தேசியகட்சிகளாகக்
காட்டிக்கொண்டன.ஆனால் நடைமுறையில்
அவை தூரநோக்கும்,பரந்தநோக்குமற்ற
இனதுவேசகட்சிகளாகவே,நடந்துவந்துள்ளன.
இருகட்சிகளும் இனதுவேசம் எனும் குட்டை
யில் 50வருடம்(1948-98)ஊறிய மட்டைகளாக
வே இன்றும்காட்சிதருவது கவலைக்குரியது

ஐ.தே.க.முதல்பிரதமர் டி.எஸ்.சேனநாயகா
ஒரு பிரிட்டிஷ்அதிகாரி போல் நடந்தார்,டட்லி
சேனநாயகா சிங்களதுவேசிகட்கும்,புத்தபிக்கு
கட்கும் பயந்து டட்லி-செல்வா ஒப்பந்தத்தை
கிழித்தெறிந்தார்.ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவோ
கண்டியாத்திரை போய் செல்வா-பண்டா
ஒப்பந்தத்தை கிழித்தெறியச் செய்தார்.போர்
என்றால் போர்!எனமுழக்கமிட்டு தமிழர்அழி
ப்புக்கும்,மகாவலிதிட்டமூலம் நிலபறிப்புக்கும்
நிறையப் பணிசெய்தார். பிரேமதாசா தமிழர்
களுடன் நண்பன்போல நடித்தாலும்,அடிப்ப
டையில் குள்ளநரித் தந்திரமுள்ளவராகவே
விளங்கிசெயலிலும் நிரூபித்தார்.டி.பி.விஜேது
ங்க தமிழர்களை சிங்களமரத்தில் படரும்
கொடிகள் என வர்ணித்து தமது சரித்திரத்
திறமையையும்,துவேசத்தையும் காட்டினார்.

மாறிமாறி தமிழ்பேசும்மக்கள் வாக்குஆதரவு
டன் ஆட்சிக்கு வந்த இருகட்சிகளும்,பதவிக்
குவந்ததும் பழைய குருடி கதவைத்திறவடி!
எனும்பாணியில் நடந்து தாம்,பதவிக்குவரும்
நோக்கைமட்டும் குறுகிய,குறுங்காலநோக்கா
கக்கொண்டு நாட்டுக்கு அழிவைத்தேடின.
மேட்டுக்குடி சிங்கள இருகட்சித்தலைமை
களும் தம்பிள்ளைகளை உயர்கல்விக்கும்,
எதிர்கால ஆட்சிநிர்வாக பயிற்சிக்குமென
மேல்நாட்டுக்கு தவறாமல் அனுப்புவதுடன்
தம்மை சிங்களதேசாபிமானிகளாயும்,வீரர்கள
ாயும் போலியாகக் காட்டி,வறிய கரையோரச்
சிங்கள இளைஞர்களையும், வறிய தமிழ்
இளைஞர்களையும் போட்டி போட்டு
பலிவாங்கி மகிழ்ந்தார்கள்; மகிழ்கிறார்கள்.
இதனால் தூரநோக்கில் சிங்களமக்களுக்கே
ஆபத்தை தேடித்தருவதாக அவர்கள் கருத
வில்லை.முக்கிய நாட்டுப்பொருளாதாரத்தை
கட்டிஎழுப்பும் மலையகமக்களையும்,அந்நிய
செலாவணியை மேற்கில் உழைத்து பாரியள
வில்அனுப்பும்,ஏற்றுமதி-சேமிப்பு-தொலைபேசி-
விமானசேவைக்கும் பாரியவருமானம் தரும்
முதலீட்டுக்கும் பாரியளவில் இலங்கைக்கு
தவும் இலங்கைத்தமிழர்களையும், மத்திய
கிழக்கில் குறைவானஊதியத்துடன் கஷ்டப்
பட்டுழைத்து பணமனுப்பும் வறிய இஸ்லாமி
யதமிழர்களையும் இருகட்சிகளும் மாறிமாறி
பாவித்தனவேயன்றி அடிப்படையில், உதவ
வோ பாதுகாக்கவோ விரும்புவதேயில்லை.
அண்மையில் இரத்தினபுரியில் மலையகமக்க
ள்,தாக்கப்பட்டு,வீடுகள் பல எரிக்கப்பட்டமை,
தொண்டமான் ஆளுங்கட்சியுடன் இருந்தும்,
பாதுகாப்பு என்பது தமிழ்பேசும் மக்களுக்கு
கிடையாது!என்பதையே காட்டுகிறது.

1999 தேர்தலில் தமிழ்பேசும்கட்சிகள் சகலரு
ம் ஒன்றிணைந்து தமிழர்சுயநிர்ணயஉரிமை
யை,சமத்துவத்தை,மதிக்கும் சிங்களஇடதுசா
ரிகட்சிகள் (நவசமாஜகட்சி டாக்டர்.விக்கிரம
பாகு போன்றோர்)அமைப்புகள்(சர்வோதயா
ஆரியரத்னா)நடுநோக்கான சிங்களபுத்திஜீவி
கள்(லயனல் பெர்னாண்டோ),சகலமக்களை
யும் உண்மையில்நேசிக்கும் புத்தபிக்குகள்,
1971ல் தெற்கிலும்,1978-98 வரை வடகிழக்கி
லும்,தெற்கிலும் காணாமல்போனவர்களின்
சகலதாய்மார்கள் அமைப்பு,மனிதஉரிமை
அமைப்புகள்,என சகலரையும் ஒன்றிணைத்து
நீதிக்கும்,சமாதானத்துக்கும்,பாதுகாப்புக்குமா
ன தேர்தல்அணியை உண்டாக்கி,வெற்றிவா
கை சூடி,புலிகளுடனும் தேர்தல்முன்பே பேசி
ஒரு ஒப்பந்தத்தை செய்து,இலங்கையை ஒரு
அமைதித்தீவாக்க மீண்டும் முயலவேண்டும்.
இருபிரதான கட்சிகளையும் புறக்கணிக்க
வேண்டும். அது தவறின் ஐ.தே.க.யுடன்
ஒரு எழுத்துமூலஒப்பந்தத்தை தேர்தல்முன்
இந்தஅணி கோரவேண்டும்.பிறநாடுகட்கு
இவை பகிரங்கப்படுத்த வேண்டும்.

அப்படியாயின் ஒப்பந்தம் பின்வருவனவற்றை
கொண்டிருக்கவேண்டும். பதவியேற்று ஒரு
கிழமைக்குள் போர்நிறுத்தம் தானாகவே
அமுலுக்குவரும்.1மாதத்துள் அரசின் சகல
கட்சிகுழு வன்னியில் புலிகளின் தலைவரை
சந்தித்து தீர்வுக்கான குறுங்காலதிட்டங்களை
யும்,நீள்காலதிட்டங்களையும் வரையும்.வடகி
ழக்கு போக்குவரத்து,சாலைகள்,சுகாதார,
உணவுசேவை 3மாதத்தில் சுமுகமாகும்.
தடுப்புமுகாம்கள்,அரசியல்கைதிகள்,தேவைய
ற்றுகைதானோர்விடுதலை 6மாதத்தில் தீர்வு.
சிங்களவர்,இலங்கைதமிழர்,மலையகதமிழர்,
இஸ்லாமியதமிழர் தேசியமன்றங்களும்,அவற்
றின் முதல்வர்கள் மத்தியஅரசில் சனாதிபதி,
உப-சனாதிபதிகளாயும் விளங்கலாம்!எனும்
அடிப்படையில் தீர்வு வரையப்படலாம்.
ஆயுதம்தாங்கிய படையினர்,இளைஞர்கள்
அபிவிருத்தி தொண்டர்படையாக மாற்றப்பட்டு
முன்னேற்றம்,அமைதி,ஐக்கியம் பேணலாம்.

சேலம்:இராசமாணிக்கம்திருச்சி: சிங்காரவேலன்,ஜான்ராஜ்தேவர் மதுரை: இரா. இரவி:சு.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன்
கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவிராமானுசம், பாலாஜி கேரளா:சிவமணி ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள்
சுந்தரம், சித்தாத்துார்:அம்பிகாபதி கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களூர்: பேராசிரியர் சி.இராமமூர்த்தி, ஆ.சி.விசுவநாதன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொலைவரி : 'வளர்தமிழ்'
Grams 'VALARTAMIL

தொலைபேசி } வல்லம் : 2
Telephone } Vallam

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

இயக்குநர்
செய்தி சேகரிப்பும் நூலகக் கண்காணிப்பும்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613005

Director
Documentation and Library Service
Tamil University, Thanjavur
South India - 613005

23.11.98

அன்புள்ள திரு பிரபு அவர்களுக்கு,

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கனிவான வாழ்த்துக்கள். தாங்கள் அன்பே அனுப்பிய 'சர்வதேச தமிழர்' இதழின் தொகுதி 5, எண். 6 அஞ்சல்வழி கிடைத்தது. தமிழர்கள் உலகத்தின் எந்தப் பகுதியில் எந்த நாட்டில் இருந்தாலும் தமிழ் மொழி உணர்வை மறக்காமல் தமிழ்ப் பணி செய்வதை அறிந்து மனமாற பாராட்டுகிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் மொழிக்காகவே துவக்கப்பட்டு ஒரு உயர் ஆய்வு மையமாக விளங்குகிறது. மற்ற பல்கலைக்கழகங்களில் நூலகர்கள் நியமிக்கப் படுவார்கள். ஆனால் நூலகவியலிலும் வரலாற்றுத் துறையிலும் கணினி இயலிலும் பேராசிரியராகத் திகழும் என்னை இங்கு இயக்குநர் என்ற பணியில் தமிழ்த் தொடர்பா தகவல்கள் அனைத்தையும் சேகரிக்கும்படி பணித்திருக்கிறார்கள். 1982ம் ஆண்டு முதல் தமிழ் மொழியில் வெளிவரும் காலமுறை இதழ்கள் அனைத்தையும் சேகரித்து ஆய்வாளர்களுக்காக பாதுகாத்து வருகின்றோம். மற்ற தகவல்களையும் பிற்கால ஆய்விற்காக சேகரித்து வைக்கிறோம்.

1) தமிழ்ச் சங்கங்கள் எந்தெந்த நாட்டில், எவர் தலைமையில் எந்த முகவரியில் பணியாற்றிவருகின்றன என்ற விவரத்தை அன்போடு தெரிவிக்கவும்.

2) வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்கள், ஆவண காப்பகங்கள் ஆகியவற்றில் தமிழ் ஓலைச்சுவடிகள், கையெழுத்துச்சுவடிகள், 100 ஆண்டுகளுக்கு முந்தைய அச்சடிக்கப்பட்ட தமிழ் நூல்கள் இருக்கின்ற விபரங்கள் அன்புடன் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். இந்திய அரசின் பண்பாட்டுத்துறையின் சார்பாக இப் பொறுப்பில் நான் நியமிக்கப்பட்டிருக்கிறேன்.

3) பல நாட்டுத் தமிழர்களின் அமைப்புகள் வெளியிடும் இதழ்கள் நூல்கள் ஆகியவற்றை அவ்வப்போது தமிழ்ப்பல்கலைக்கழகத்தைத் தங்கள் தாய்வீடாக நினைத்து அனுப்பிவைக்குமாறு தங்களுடைய காலமுறை இதழ்கள் வழி அறிவிப்பு செய்து தமிழ்ப் பணிக்கு அன்புடன் உதவுமாறு வேண்டுகிறேன்.

4) தங்கள் சர்வதேச தமிழர் இதழ் மிக அருமையாக வடிவமைக்கப் பட்டிருக்கிறது. தற்போது தமிழ்நாட்டுப் பண்பாடு சீரழிவில் இருப்பதற்கு தமிழ் மக்கள் திரைப்பட வெறியில் மூழ்கிடுவதே காரணமாகும். திரைப்படங்களை மூன்று மணிநேரம் பார்த்துவிட்டு அலுவலக நேரங்களில் படங்களைப் பற்றிப் பேசியே நேரத்தைப் பாழாக்குகின்றது தற்கால தமிழர் சமுதாயம். சிறுவர் இதழாக <u>தமிழ்வாணன்</u> நடத்திய 'கல்கண்டு' இதழ்கள் கூட இன்று திரைப்பட செய்திகளை அதிகமாக வெளியிட்டு வருகின்றன. எங்களுடைய தாக்கம் உங்களுக்கெல்லாம் வரக் கூடாது என தனிப்பட்ட முறையில் அன்போடு வேண்டுகிறேன்.

தங்களுடைய விரிவான கடிதத்தை எதிர்பார்க்கிறேன். எங்களுடைய நிலையில் உங்களுக்காக நாங்கள் செய்யவேண்டிய பணிகள் என்ன? என்று எதிர் பார்க்கிறீர்கள். தங்களுடைய தேவைகளை தெரியப்படுத்துங்கள். இயன்றவரை உதவிசெய்ய காத்திருக்கிறோம்.

அன்புடன்,
[signature] 25/11
த. பத்மநாபன்
இயக்குநர்.

தயவுடன் அனைவரும் உதவுங்கள்! -ஆசிரியர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோர்வே கலைஞர் அன்ரன் டேவிட்டின் சுவையான பேட்டி!

நோர்வேயில் வாழும் ஈழத்து கலைஞர்களிடையே மூத்த கலைஞர்!என விளங்கும் யாழ்.சுண்டுக்குளியை சேர்ந்த அன்ரன் டேவிட் விசேடமாகக் குறிப்பிடத்தக்க வர். நாட்டுக்கூத்து, நாடகம், இசை மூலம் கலையுலகில் புகுந்தவர்! 1965ல் பாடஆரம்பித்தவர்! தமிழ்நாட்டிலும் யேசுதாஸ்,எஸ்.பி.பாலசுப்ரமணியம், சித்திரா,கங்கைஅமரன் போன்ற முன்னணிக் கலைஞர் களுடனும் பாடியவர்! பாராட்டுப் பெற்றவர் ஈழத்தில் ஏ.ஈ.மனோகரன்,பரமேஸ்-கோணேஸ் காலத்தி லேயே யாழ்.அரங்குகளில் முத்திரை பதித்தவர்! சிரித்த முகம், நட்பாக மென்மையாக பேசும்சுபாவம், எவருடனும இலகுவில் நட்பாகிவிடும் தன்மை, கலகலப்பாக பழகுபவர்! நண்பர் சிவானந்தனுடன் இவரை ஒஸ்லோவில் பேட்டி கண்டபோது பல சுவையான தகவல்கள் கிட்டியது.

1950 புரட்டாதி 5ல் பிறந்த இவர், சென்.பற்றிக் கல்லூரியில் கல்விகற்றார். இவர் சிறந்தபாடகராக இளவயதிலேயே யாழ்.மாநகரசபை விருதுபெற்றார். பல பாடசாலைப்போட்டிகளில் பரிசுகளை தட்டிக் கொண்டவர்.1996ல் ஐரோப்பாவில் சிறந்தகலைஞன் என பாராட்டுப் பெற்றது கிட்டிய சாதனை! இவரது பிள்ளைகளான அனோஜா(8),நிருந்தா(17) வும் இசையில் சிறப்பாக தந்தைவழி செல்கிறார்கள். இவர்கள் பேச்சுப்போட்டி,நடனம் என பலதுறையிலும் ஈடுபடுகிறார்கள்.பரிசுபெகிறார்கள். பல வெளிநாட்டு இசைநிகழ்ச்சியில் பங்குகொள்கிறார்கள்.

நோர்வேயில் யாழிசை குழுவை ஆரம்பிப்பதில் இவர் முன்னோடியாக விளங்கினார்.தமிழ்ச்சங்கத்தில் கலை ச்செயலாளராகவும் பணிபுரிந்தார்.பாடகராயும்,நாடகம் தந்தும் சங்க வளர்ச்சிக்கு பணிபுரிந்தார். ஜேர்மனியில் நடந்த தமிழருவி விழாவில் இசைப் போட்டியில் யாழிசைக் குழு முதல்பரிசை வென்றது. யாழ்.ராஜன் இசைக்குழுவில்,60களில்,பொப் இசையில் பிரபலமானதுடன் இந்திப்பாட்டுகளை பாடி தமிழ்உள் ளங்களை கொள்ளைகொண்டார்.ஒரு காலத்தில் யாழ்.மாவட்டத்தில் இந்திப்பாடல்களை பாடுவதில் இவர் முதன்மைவகித்தார் எனலாம்.இவரது கலைச் சேவைக்கு வயது 35வருடம் எனலாம்.

தமிழ்நாட்டில் சித்திரா,வித்தியா,சசிரேகா ஆகியோருட ன்,சேர்ந்துபாடி,இதயராகம்-ஒடியோவை வெளியிட்டார். எஸ்.பி.பி.,ஆசிசெய்தி தந்து,ஆரம்பித்து வைத்தார். சாந்தோம் கலையகஆதரவில்,ஏ.வி.எம்.ஸ்ருடியோவில் ரி.என்.பிரான்சிஸ்,பாடல்,இசையில் வெளியிடப்பட்டது. தாயகபாடல்கள்,இவரது,நாட்டுப்பற்றைவெளிக்காட்டின. எனதுதாயகம்,அம்மா அன்புதாயே,எமக்கொரு வாழ்க் கை என்ற பாடல்களை தானே எழுதி இசையமைத்து பாடினார்.ஈழத்தில் பெரும்வரவேற்பை,பெற்றவையிவை!



பாடகி.சித்ராவுடன்

1970களில் சங்கர்-கணேஸ்,ஜேசுதாஸ் இவர்களின் குழுவில் சென்னையில் பல மேடைகளில் பாடினார். மனோ,எஸ்.பி.பாலசுப்ரமணியம் ஆகியோருடன் திரைப் படத்துக்கு கோரஸ் குரல் கொடுத்தார். இலங்கை வானொலியிலும் இவர் குரல் ஒலித்தது. அப்துல் கமீத் அறிவிப்பில் தென்றல்,அபூர்வராகங்கள், நிகழ்ச்சியில் பங்குகொண்டார்.சிங்கள,தமிழ்,முஸ்லிம் கலைஞர்களுடன் ஒரேமேடையில் பாடினார்.

1998 ஐப்பசியில் டென்மார்க் ,கோர்ணிங்கில் நடந்த இசைநிகழ்ச்சியில் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டார். ஒஸ்லோவில் நடந்த ஆசியன் நைட்டில் பாகிஸ்தானி யர்,இந்தியர்களுடன் பாடி பரிசும்,பாராட்டும் பெற்றார். நோர்வேயில் பல்சமூகஒற்றுமைக்கும் பாலமாயுள்ளார். சமாதானத்துக்கானஇசை!என்றே அந்நிகழ்ச்சி நடந்தது 1993ல் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் சுதந்திரதாகம் நிகழ்ச்சியில் நாட்டுக்கூத்தை நோர்வேஜியர்களும் அறிய செய்து காட்டினார்.

1993ல் டென்மார்க் ஊடாக ஒரு ஈழத்துகலைஞர் குழு நோர்வேக்கு இவரது அழைப்பின்பேரில் வந்த போது,சில விசமிகளின் வேலையால் அந்த குழுவை போலிசார் கப்பலைவிட்டு இறங்கவிடாது,திருப்பிஅனுப் பிவிட்டனர்.அதனால் ஒழுங்குசெய்த செலவுகள் நட்டத்துடன்,மனமுடைந்து இதயவருத்தம் ஏற்பட்டது. முன்புபோல் அதிகம் நிகழ்ச்சிகளில் ஈடுபடமுடியா விடினும் ஆர்வம்காரணமாக அவ்வப்போது(வெளிநாடு களிருந்து வரும் அழைப்புகளை) மறுப்பதில்லை.

எம்.எஸ்.விசுவநாதனின் இசையை விரும்பும் இவர், பாரபட்சமின்றி இளங்கலைஞர்களை தமிழர் ஊக்குவி கவேண்டுமென்கிறார்.திறமைக்கு முதலிடமே தவிர தனிப்பட்ட விருப்புகட்கு கலையில் இடமளிக்ககூடாது! நான் என்ற அகங்காரம் கூடாது! சில இசைக்குழு வினர் நான் என்ற அகங்காரத்துடன் நோர்வேயில் நடந்துகொள்வது கவலைக்குரியது! என்கிறார். ஈழத்திலும்,உலகிலும் தமிழர்கட்கு நிம்மதி,அமைதி, கலையால் மகிழ்வுகிட்ட பிரார்த்திப்போம்!என்கிறார்.

தான் இந்தியா சென்றபோது,சென்னையில் பெங்களூர் தமிழர் ஒருவரை சந்தித்தபோது,நோர்வே என்றதும் சர்வதேசதமிழர் பற்றிகூறி,அமைதியாக உலகத்தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதி உழைப்பதை பாராட்டிய தும் தான் வியப்பும்,மகிழ்வும் அடைந்ததாக கூறினார். சோதனை,வேதனை பல கண்ட இவர் அவற்றை தாண்டி சாதனைபடைத்த கலைஞர்!என்றே கூறலாம். தாய்த்தமிழகம் உலகில் பரந்துவாழும் ஈழத்தமிழர் திறமையை,அனுபவத்தை இலக்கியம்,இசை,சினிமா போன்ற துறைகளில் வெளிக்காட்ட மேலும் முன்வரல் அவசியம்!என்பது சர்வதேச தமிழர் கருத்து!- -பிரபு



புதல்வி.அனோஜா



புதல்வி நிருந்தா



பாடகி.அனுராதாவுடன்

www.tamilarangam.net



# தமிழ்

# இலக்கியங்களுக்கு

## ஒரு மின்தொகுப்புத் திட்டம்

*உலகம் போகிற போக்கைப் பார்த்தால், பழைய தமிழ் இலக்கியப் பொக்கிஷங்கள் ஒரு காலத்தில் மக்களால் அறியப்படாமல் போய்விடுமோ, அழிந்துபோய்விடுமோ, 'அப்படியொன்று இருந்ததா?' என்று வியந்து கேட்குமளவுக்கு வரலாறாகிவிடுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.*

*ஒரு புத்தகக்கடைக்கு ஒருவர் போய், "பத்துப் பாட்டு இருக்கிறதா?" என்று கேட்கிறார். "பத்துப் பாட்டு பதினைந்து பாட்டு என்றால் எப்படி ஸார்?" என்ற கடைக்காரர் இப்படித் தொடர்கிறார். "எந்தப் படத்தில் என்று சொல்லுங்களேன்."*

*ஒரு புத்தகக் கடைக்கு வந்த தமிழாசிரியர் ஒருவர், "சங்க காலத்து நூல்கள் தங்களிடம் இருக்கின்றனவா?" என்று தங்கத் தமிழில் தயங்காமல் கேட்கிறார்.*

*கடைக்காரர் பச்சைக் கசப்பான பேதி மருந்தைக் குடித்தவர்போல வாயை வைத்துக்கொண்டு, வந்தவர் ஏதோ அபின் கஞ்சா கேட்டுவிட்ட தோரணையில், "அதெல்லாம் நாங்க விக்கிறதில்லை. அதோ அந்தச் சின்னக் கடையில் ஒரு பெரியவர் அதெல்லாம் விற்றுக்கொண்டிருந்தார். அங்கே போய்ப் பாருங்கள்" என்றவர், மறு பக்கம் திரும்பி ஒரு நமட்டுச் சிரிப்புடன், "அந்தப் பெரியவரே இப்போ இருக்கிறாரோ, என்னவோ" என்று முணுமுணுக்கிறார்.*

*மேற்படி உரையாடல் ஒரு கற்பனைதான். ஆனால் காலம் போகிற போக்கில், நடக்கமுடியாத கற்பனையல்ல. கல்வியோடு இலக்கிய ரசனையையும் சேர்த்து ஊட்டிய காலம் மலையேறிவிட்டது. அதனால் மக்களிடையே இலக்கியம்பற்றிய அறிவு அருகிவிட்டது. அதனால் நமது முன்னோரின் அறிவுக் களஞ்சியங்களைத் தேடித் தேடிப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அற்று வருகிறது. அதனால் கடைகளுக்குப் போய் இந்த நூல்களை விரும்பி வாங்குவோர் காலப் போக்கில் குறைந்துகொண்டே வருகிறார்கள். அதனால் இத்தகைய நூல்களின் புதிய பதிப்புகளை வெளிக்கொணரப் பதிப்பாளர்கள் பயப்படுகிறார்கள். இப்படியே போனால் எங்கே போய் நிற்கும்?*

*"ஆமாம், என்ன சொன்னீர்கள்? கலிங்கத்துப்பரணியா? அப்படி ஒரு வில்லங்கமான பெயரைத் தாத்தா அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார். அவருக்கு வயசானதாலே, அதையெல்லாம் நாங்க கணக்கெடுக்கிறதில்லை" என்று பிள்ளைகள் பேசும் ஒரு காலம் வந்திருக்கும்.*

*ஆனால் வரவில்லை. அதை முந்திக்கொண்டு இணையவலை (internet) வந்துவிட்டது. உலகெலாம் வாழும் மக்கள் தங்கள் மொழிகளின் படைப்புகள் அனைத்தையும் மின்னெழுத்துக்களில் பதிந்து மின்தொகுதிகளாக்கிப் பாதுகாக்கும் வாய்ப்பு வந்துவிட்டது. இன்றே தொடங்கி இன்றே செய்து இன்றே முடிக்க வேண்டும் என்ற வேகமும் கூடவே வந்துவிட்டது.*

*அவுஸ்திரேலியாவில் பாலா பிள்ளை பாலா பிள்ளை என்றொரு நல்ல மனிதர் இருக்கிறார். இது கதையல்ல, உண்மை. அவருக்கு நெடுமாறன் நெடுமாறன் என்றொரு நல்ல நண்பரும் இருக்கிறார். இதுவும் கதையல்ல, உண்மை. அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் 'தமிழ் இணையம்' என்ற ஓர் அமைப்பைத் தொடங்கினார்கள். உலகின் பல நாடுகளில் வாழும் பல நாடுகளையும் சேர்ந்த தமிழ் மக்கள் பலர் இந்தத் தமிழ் இணையத்தில் இணைந்து மின்னஞ்சல்கள் வாயிலாகப் பல சுவையான பயனுள்ள கருத்துப் பரிமாறல்களைச் செய்து வந்தார்கள். தமிழிலேயே மின்னஞ்சல்களை அனுப்பவும் படிக்கவும் தேவையான தமிழ் எழுத்துக்களையும் அமைப்பாளர்கள் தயாரித்து உறுப்பினருக்கு இலவசமாகவே வழங்கினார்கள்.*

www.tamilarangam.net

யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்; களுவாஞ்சிக்குடி: வி.காந்தகுமார்மாத்தளை: தவ.சஜிதரன்
திருகோணமலை: மதுமாரி ,தாமரைத்தீவான் கண்டி: எஸ் .மயில்வேந்த ன்; இரா.கனகரத்தினம் அட்டன்:பா.சங்குப்பிள்ளை;
குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்: ம.மனோகரன்அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா: பவளம்.ப.த்மா

*இந்தத் தமிழ் இணையத்தின் மிகப் பெரிய அறுவடை கடந்த பொங்கல் நாளன்று ஆரம்பமானது. அன்று "PROJECT MADURAI" என்ற ஒரு செயல் திட்டம் தொடங்கப்பட்டது. அதற்கு "மதுரைத் தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்" என்ற அழகான தமிழ்ப் பெயரும் சூட்டப்பட்டது. இந்த அமைப்பில், தமிழில் படைக்கப்பட்ட எல்லாப் பண்டைய இலக்கியங்களும் தற்காலத் தமிழ்ப் படைப்புகளும் மின்னெழுத்துக்களில் பதிந்து பாதுகாக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி பதிவு வேலைகள் உடனடியாகத் தொடங்கப்பட்டு வேகமாக நடைபெற்று வருகின்றன.*

*இந்தச் செயல் திட்டத்தின் பெயர் 'மதுரைத் தமிழ் இலக்கிய ...' என்று ஆரம்பிப்பதால் மதுரையில் வாழ்ந்த, வாழ்கின்ற படைப்பாளிகளின் படைப்புகள்தாம் இதில் இடம்பெறும் என்று அர்த்தமல்ல. நாலு மதுரைக்காரர்கள் வெளிநாட்டில் தொடங்கிய கிழக்கிந்தியக் கம்பனிபோன்ற வர்த்தக நிறுவனமுமல்ல. இந்தியாவில், இலங்கையில், மலேஷியா சிங்கப்பூரில், இன்னும் இந்த உலகில் எங்கெங்கு தமிழ் பேசப்படுகிறதோ எழுதப்படுகிறதோ அங்கெல்லாம் தோன்றும் தமிழ் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் இத்தொகுப்பில் இடம்பெறும். புலம்பெயர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளும் இதில் இடம்பெறும்.*

*"அதில்லை. இந்த 'மதுரைத் தமிழ் இலக்கிய ... ' என்று தொடங்கும் பெயர் ஏன்?" என்று மீண்டும் கேட்கிறீர்களா? சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரைக்குத் தரும் மதிப்பு அது! தடாதகைப் பிராட்டியாரும் சோமசுந்தரமூர்த்தியும் உக்கிரப் பெருவழுதியாகிய குமரக் கடவுளும் திருமுடி சூடி அரசாண்ட மதுரைக்குத் தரும் மாண்பு அது! ஆயிரக் கணக்கான வருடங்களாக ஆயிரக் கணக்கான அறிஞர்கள் கூடிக் கூடி ஆயிரக் கணக்கான நூல்களை இயற்றி ஆராய்ந்து தமிழ் வளர்த்த கூடல் நகருக்குக் கொடுக்கும் கௌரவம் அது!*

*இந்த மின்தொகுப்புத் திட்டத்துக்கு சுவிற்சலாந்தில் வாழும் முனைவர் கல்யாணசுந்தரம் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறார். அமெரிக்காவில் வாழும் முனைவர் குமார் மல்லிகார்ஜுனன் இணைத் தலைவராக இருந்து அரிய சேவை புரிந்து வருகின்றார். உலகெலாம் பரந்து வாழும் ஏனைய இணைப்பாளர்களின் விபரங்களை இக்கட்டுரையின் கடைசியில் காண்க.*

*இது முற்றிலும் ஒரு பொதுப்பணி. இது, பல நாடுகளில் வாழ்கின்ற தமிழ் ஆர்வலர்கள் ஊதியம் கருதாது உழைத்துத் தமிழ் நூல்களை மின்னெழுத்துக்களாக்கிப் பாதுகாக்கும் அரிய பணி. இது, உங்களுக்காகத் தொடங்கப்பட்ட பெரிய பணி. இது, உங்கள் உழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்ற ஒரு நல்ல பணி. அடுத்த தலைமுறையினரும், இந்தத் திட்டத்தில் உங்கள் பங்களிப்புக்காக உங்களைப் பாராட்டி உங்களுக்கு நன்றி கூறப்போகிற பாரிய பணி.*

*நிழல்வெளியில் (cyber space) கம்பீரமாக எழுகின்ற இந்தப் பிரமாண்டமான தமிழ் இலக்கிய மாளிகைக்கு நீங்களும் ஒரு தூணை நிறுத்திப் பெருமைப்படுங்கள். அந்தத் தூணில் உங்கள் கைவண்ணத்தைப் பொறித்து நிறைவு பெறுங்கள்.*

*நீங்கள் ஓர் இலக்கிய நூலை மின்னெழுத்துக்களில் பதிந்து கொடுக்கலாம். இன்னொருவர் மின்னெழுத்துக்களில் பதிந்த நூலைச் சரிபிழை பார்த்துக் கொடுக்கலாம். உங்களிடம் ஏதாவது அரிய நூல் இருந்தால், அந்த நூலையோ அதன் புகைப்படப் பிரதிகளையோ தந்து உதவலாம். எதுவுமே சாத்தியமில்லை என்றால் இப்பணியில் ஈடுபட்டோரைப் பாராட்டி அவர்கள் முதுகில் தட்டிக் கொடுக்காலம். வேறென்ன செய்யலாம்? என்று உங்கள் நெஞ்சைநீங்களே தொட்டுக் கேட்கலாம்.*

*பொங்கலன்று தொடங்கிய இந்தப் பணியின் இன்றைய இன்றைய நிலை என்னவென்று கேட்பீர்கள். அமெரிக்காவில் முன்னிரவில் ஒருவர் வேலையை நிறுத்திவிட்டு நித்திரைக்குப் போகும் அந்த நேரம் சிங்கப்பூரில் அதிகாலையாக இருக்கலாம். அங்கே ஒருவர் நித்திரைவிட்டு எழுந்து இப்பணியைத் தொடங்கியிருப்பார். எனவே, ஒவ்வொரு நிமிடமும் உலகில் எங்காவது ஓரிடத்தில் இப்பணி நடந்துகொண்டே இருக்கும். ஆதலால் இன்றைய நிலை இதுதான் என்று சொல்வதற்கில்லை. இக்கட்டுரையை எழுதும் நேரத்தில் நிலைமை வருமாறு:*

ஞானப்பிரகாசம் தென்கொரியா :ஏ.யு.எல்.ஏ.ஹில்மி பிஜி: ச.சச்சிதானந்தம் தென்.ஆபிரிக்கா: செல்வன்பிள்ளை பொற்ஸ்வானா:
கமலா.வேலுப்பிள்ளை புரூணை: கிருஷ்ணராஜா யப்பான்: டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்: கிருஷ்ணன் மலேசியா:
ஜ.மாணிக்கவாசகர், க.கணேசன் ,அருண் பேராசிரியர்.இர.ந.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திர சேகரன்;
யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு:நா.சங்கான் பர்மா:அப்துல் ரசாக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழர் சனநாயகத்தமிழர்களின் கொள்கைமுரசாக விளங்கும். வாசகர்கருத்துக்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

**பின்வரும் நுல்கள் முற்றுப்பெற்றுவிட்டன:**

*திருக்குறள் - திருவள்ளுவர்*
*ஆத்திசூடி, கொன்றைவேந்தன, நல்வழி, மூதுரை - அவ்வையாார்*
*திருவாசகம் (8ம் திருமுறை) - மாணிக்கவாசகர்*
*திருமந்திரம் பாகம் I - (10ம் திருமுறை) திருமூலர்*
*திவ்விய பிரபந்தம் பாகம் I - பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர்*

*இவற்றை இப்பொழுது இணைவலையில் (இன்டர்நெட்டில்) இணைமதி, மயிலை தமிழ் எழுத்துக்களில் படிக்கலாம். இந்தத் தமிழ் எழுத்துக்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ளலாம். இதற்கான வலைப்புல (web site) முகவரி வருமாறு:*
**http://www.tamil.net/projectmadurai/pmcoord.html**

**மின்னெழுத்துக்காளில் விரைவில் வெளிவர இருப்பன:**

*திவ்விய பிரபந்தம் II - திருமங்கையாழ்வார்*
*திவ்விய பிரபந்தம் III நம்மாழ்வார் ஆகியோர்*
*திருமந்திரம் பாகம் II (10ம் திருமுறை) - திருமூலர்*
*திருமந்திரம் பாகம் III (10ம் திருமுறை) - திருமூலர்*
*பாரதியார் படைப்புகள் - சி. சுப்பிரமணிய பாரதியார்*
*பாரதிதாசன் படைப்புகள் - பாரதிதாசன்*

**எழுத்து வேலை முடிவுற்றுச் சரிபிழை பார்க்க இருப்பன:**

*திருவிசைப்பா (9ம் திருமுறை) - திருமாளிகைத் தேவர் ஆகியோர்*
*11ம் திருமுறை), 1400 பாடலகள் -காரைக்கால் அம்மையாார் ஆகியோர்*
*பட்டினத்தார் பாடல்கள், முழுவதும் - பட்டினத்தார்*
*நளவெண்பா - புகழேந்திப் புலவர்*

**பின்வரும் நூல்களின் எழுத்து வேலை நடைபெறுகின்றது:**

*திருப்புகழ் - அருணகிரிநாதர்*
*திருவருட்பா இராமலிங்க அடிகள் (வள்ளலார்)*
*சீறாப் புராணம் - உமறுப் புலவர்*
*கம்பராமாயணம் - கம்பன்*
*நன்னூல் - பவந்தி முனிவர்*
*திருவாசகம், ஆங்கில மொழியாக்கம் - Rev. G.U.Pope*
*திருக்குறள் உரை - பரிமேலழகர்*
*அஷ்டபிரபந்தம் - பிள்ளை பெருமாள் அய்யங்கார்*
*பதிற்றுப்பத்து - குமட்டூர்க் கண்ணனார் ஆகியோர்*

**எழுத்து வேலை விரைவில் தொடங்கவிருப்பன:**

*திருக்குறள், ஆங்கில மொழியாக்கம் - யோகி சுத்தானந்தர்*
*பாரத சக்தி மகா காவியம் - பாரதியார்*
*முருகன் அல்லது அழகு - திரு. வி. க.*
*தற்கால இலங்கைத் தமிழ் இலக்கியம் - பல நூலாசிரியர்கள்*
*பண்டைய இலங்கைத் தமிழ் இலக்கியம் - பல நூலாசிரியர்கள்*

*கட்டுரை: ஆர்.சிவலிங்கம் (உதயணன்) , Helsinki, Finland*

***<u>பாரின் பல பாகங்களிலிருந்தும் இப்பாரிய பணியில் பங்குகொள்வோர்</u>***

***<u>வருமாறு:</u>***

***செயல் திட்டத்தின் தலைவர்***
**முனைவர் கே. கல்யாணசுந்தரம், Lausanne), Switzerland*
*மின்னஞ்சல்: <kalyan@dcsun1.epfl.ch>*

***செயல் திட்டத்தின் இணைத்தலைவர்***
**முனைவர் பீ. குமார் மல்லிகார்ஜுனன், Griffin, Ga, US*
*மின்னஞ்சல்: <pmallik@cfsqe.griffin.peachnet.edu>*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இரத்தினபுரி, வேவல்வத்தை,
ளுப்பொலைதோட்டங்களில்
டம்பெற்ற மோசமான வேதனைக்
ரிய நிகழ்வுகள் சம்பந்தமாக
கைப்படுத்தப்பட்ட காட்சிகளும்
சய்திகளுமே முழு நாட்டிலும்
ரவி இருக்கின்றன என்பதை அந்த
ன்முறை நிகழ்வுகள் சம்பந்தமாக
வளியான செய்திகளிலிருந்து
ர்ந்து புரிந்து கொள்ள முடிகிறது.
ஆகவே இந்த இனவாத வன்முறை
வறியாட்டத்தின் பின்னணியிலே
தைந்துள்ள நிகழ்வுகளைப் பற்
ய சத்தியமான செய்திகளை
ழுதி மக்கள் முன் உண்மையை
டுத்து வைப்பது, குறிப்பிட்ட பிர
சத்திலே வாழ்பவன் என்ற வகை
லே எனது கடமையும் பொறுப்பு
ாகும் என்றே கருதுகிறேன்.''**

998ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் திகதி
ழ் தொழிலாளர்களின் குடியிருப்புகளான
ம் அறைகளுக்குப் பக்கத்தில் இரண்டு சிங்க
ர்கள் வெட்டிக் கொல்லப்பட்டுக்கிடந்த சம்
த்தினைத் தொடர்ந்து கொழுந்து விட்டெ
 இனவாத வன்முறைத் தீ, இறுதியிலே
க்கும் மேற்பட்ட லயம் அறைகளை சாம்ப
க்கிய சம்பவத்தோடு சற்றே ஓய்ந்திருக்கிறது.
குறிப்பிட்ட இரு சிங்களவர்களும் கொல்லப்
வதற்கான காரணங்கள் இவைதான் என்று
பாலிஸாரும் பொதுத் தகவல் ஊடகங்களும்
ரிவித்த கருத்துக்கள் உண்மைக்கு மாறான
, பரஸ்பர நம்பகத்தன்மை அற்றதாகவும்
ளன என்பதை குறிப்பிட வேண்டியிருக்கி
. பெண்கள் கற்பழிப்பு விவகாரம் தான்
கச்சலை உண்டாக்கிவிட்டதாக சிலர் கூற,
ிப்பு) கள்ளச்சாராய பிரச்சினையே கலவரத்
கு காரணம் என்று மற்றொரு சாரார் கூறியி
தனர்.

இந்தவன்முறைச் சம்பவத்திற்கு மூலகாரண
க இந்த இரண்டு சம்பவங்களில் எதை வேண்
ானாலும் எடுத்துக் கொள்ளலாம் என கூறி
லும் இந்த சம்பவத்தின் பின்னணியிலே
தந்துள்ள உண்மைகள் இவற்றிற்கெல்லாம்
ர்மாறானவையாகவே உள்ளன என்பதை
 கூற வேண்டியுள்ளது. ஆகவே இந்த சம்ப
 பற்றிய உண்மைகள் ஆராயப்படாமல்
ளியிடப்படுகின்ற கருத்துக்கள் அனைத்
மே ஒவ்வொருவரினதும் மேலோட்டமான
த்துக்களேயாகும். இரத்தினபுரி தொடக்கம்
ாங்கொடை வரை நீண்டபெரும் பாதை
ாடு இணைந்ததாக அமைந்துள்ள தமிழ்
ாட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக
க அமைந்துள்ள மேற்குறித்த லயம் அறை
 அனைத்தும் தேயிலைத் தோட்டங்களை
டிப்படையாக வைத்தே உருவாக்கப்பட்ட
யாகும்.

வெள்ளையரான ஏகாதிபத்தியவாதிகள் மூல
, தோட்டங்களில் வேலை வாங்குவதற்காக
ன் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட
த தமிழ்த் தொழிலாளர்க்ள் எந்தவிதமான
ப்படை வசதிகளும் வழங்கப்படாதவர்க
, உரிமைகள் மறுக்கப்பட்ட ஊமை ஜீவன்க
 பல சகாப்தங்கள் தமது உழைப்பினை மாத்
மல்ல தங்களது உயிர்களைக் கூட இந்த
ணை செழிப்படையச் செய்வதற்காக அர்ப்
ம் செய்திருக்கிறார்கள்; அதுவும் மற்றவர்க
 உயர்வுக்காகவும் அடுத்தவர்களின் இலாப
ிகளுக்காகவுமே ஆகும். அதுமட்டுமல்ல
 உழைப்பிற்காக அநேகமாக அவர்கள்
ற்றுக்கொண்டது ஊதியத்தினை விடவும்
கமான வசதிபடைத்த வலியவர்களின்
சமொழிகளேயாகும்.

எமக்கு நினைவு தெரிந்த காலம் தொட்டு இந்த தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையினை உற்று நோக்கியதிலிருந்து அவர்களது வாழ்க்கை அன்றுமுதல் இன்று வரையிலே ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குட்பட்ட கதையாகவே தொடர்ந்து இருந்து வருவதை நாமறிவோம். அவர்களின் அனைத்துக் காரியங்களிலும் நிறைவேற்றுத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அந்தந்த தோட்டத்துறை அதிகாரிகளின் கைகளிலேயே தங்கி இருக்கிறது.

அதுமட்டுமன்றி குறிப்பிட்ட தேயிலைத் தோட்டங்களுக்குள் இருந்து வெளியுலகுக்கு வந்துவிட்டால் பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு அடிபணிந்தே அவர்கள் வாழ வேண்டியுள்ளது. சிங்களவர்களின் அனுமதியின்றி கிராமங்களுக்குள் நுழைந்து தொழில் பார்க்கவோ விறகுத் துண்டுகள் சேகரிக்கவோ அவர்களுக்கு சுதந்திர உரிமை கிடையாது. பொது பஸ் வண்டிகளில் கூட மற்றைய மக்களைப் போல தைரியமாக, உரிமையோடு தமது பிரயாணத்தை மேற்கொள்ளும் வாய்ப்புக்கூட அந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டே வந்துள்ளது.

தமக்கு என்ன அநீதிகள் செய்யப்பட்டாலும் அதை அவர்கள் பொறுமையோடு தாங்கிக் கொள்ள வேண்டுமெயொழிய ஏதும் பேசிவிடக்கூடாது. தவறியேனும் அந்த நிகழ்ந்த அநீதிக்காக குரல் கொடுத்து ஏதாவது பேசிவிட்டால்போதும், அப்புறம் அடிவாங்குவது நிச்சயமாகிவிடும். இப்படியான தாக்குதல் சம்பவங்கள் வாரத்தில் ஓரிரு தடவைகளேனும் இடம் பெற்றே வந்துள்ளன. அதுமட்டுமன்றி சில தோட்டப் பெண்களைக் கற்பழிப்பது, தோட்ட மக்களின் பொருள்களை சூறையாடுவது, தோட்டப் பெண்களை மானபங்கப்படுத்துவது போன்ற நிகழ்வுகள் சர்வசாதாரணமாகவே இடம் பெற்று வந்திருக்கின்றன. இப்படியான அநீதிகளுக்காக அந்த அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் நியாயம் தேடி பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்வது கூட அரிதாக இருந்து வருகிறது. பொலிஸாரின் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கை மூலமாக தமக்கு நீதி கிடைக்காது என்ற உண்மையினை அந்த மக்கள் அறிந்து வைத்திருப்பதும் அதற்கு ஒரு காரணமாகும்.

இப்படியான எல்லாவித அடக்குமுறைகளையும் வெறியாட்டங்களையும் பொறுமையோடு சகித்து வந்த தோட்டத் தொழிலாளர்கள் பல தலைமுறைகள் அமைதியோடு இந்த மண்ணுக்குள் சங்கமமாகிவிட்டார்கள். ஆனால் உருவாகிக் கொண்டிருக்கும் இந்த தோட்டத் தொழிலாளரின் புதிய தலைமுறை, இனிமேலும் இந்த அடக்கு முறைகளையோ, தமது பரம்பரைத் தலைவிதியையோ ஜீரணித்து ஏற்றுக்கொள்ளவோ, சகித்துக் கொள்ளவோ தயாராக இல்லை என்பதையே அவர்களது மேற்குறித்த எதிர்நடவடிக்கை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

வேவெல்வத்தை அளுப்பொலை தோட்டத்தில் இரு சிங்களவர் கொல்லப்பட்டதை வெறும் கள்ளச்சாராய விவகாரத்தால் உருவானதென தீர்மானித்து விட முடியாது. நீண்ட காலமாக அழுகி சீழ் கட்டி ரணமாகி இருந்த காயத்திலிருந்து இப்பொழுது [illegible] வெடித்து சலம் வெளியேறி இருக்கிறது என்றுதான் கூறவேண்டியுள்ளது. கொல்லப்பட்டவர்களில் பந்துசேன என்பவரைப்பற்றி தமிழர்கள் மத்தியில் மாத்திரமல்ல சிங்களவர்களுக்கிடையில் கூட அதிருப்தியான நிலையே இருந்து வந்திருக்கிறது. கள்ளச்சாராய விவகாரத்தோடு பல கற்பழிப்பு விவகாரங்களிலும் அவர் சம்பந்தப்பட்டவர் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெற்ற கொலைச்சம்பவம் பற்றி நீதியான விசாரணை நடைபெற வேண்டுமென்பதே அனைவரினதும் கருத்தாகும். ஆனால் விசாரணை இடம் பெறுவதில் வேண்டுமென்றே தாமதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மட்டுமன்றி குறிப்பிட்ட பிரதேசத்தின் செல்வாக்குமிக்க அரசியல்வாதி ஒருவர் இந்த விவகாரத்திலே தனது செல்வாக்கினைப் பாவித்து அழகாக காரியமாற்றி இருக்கிறார் என்பதும் புலப்படுக்கப்பட்டுள்ளது.

அதாவது கொலைச்சம்பவம் நடைபெற்ற மறுதினம் லொறிகளில் வந்திறங்கிய 200க்கும் மேற்பட்ட சிங்கள இனவாதக் குண்டர்கள் 50 பேர் கொண்ட கோஷ்டிகளாக பிரிந்து லயம் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்து அங்கிருந்த தமிழ் மக்கள் அனைவரையும் மூர்க்கத்தனமாக தாக்கி விரட்டி அடித்து விட்டு எல்லா லயம் அறைகளுக்கும் தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் தீவைத்து கொளுத்தியிருக்கிறார்கள்.

அளுப்பொல தோட்டத்திலிருந்து அக்ரஸ் லான்ட், வெல்லாவெல ராஸ்ஸகல வரையில் உள்ள லயங்கள் அனைத்துமே தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழ் மக்கள் தங்களது உயிர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அருகில் உள்ள காடுகளுக்குள் புகுந்திருக்கிறார்கள். தெருவிலே .வாகனங்களை நிறுத்தி தமிழர்கள் கீழே இறக்கப்பட்டு தாக்கப்பட்டதன் காரணமாக வீதியால் நடந்து தப்பியோடவும் முடியாத நிலை. கிராமங்களுக்குள் குறுக்கு வழிகளில் வெளியேறவும் முடியவில்லை. எந்தவித வாகன வசதிகளும் அவர்களுக்கு கிடையாது. ஆகவேதான் உயிர் தப்புவதற்காக வனாந்தரத்திற்குள் நுழைந்திருக்கிறார்கள் அந்த அப்பாவி மக்கள். இப்படியான மரண பயத்திலே காடுகளுக்குள் புகுந்த பலர் இன்னமும் திரும்பி வரவில்லை என்ற செய்திகள் ஒருபுறமிருக்க, எந்தவித உணவோ, பானமோ இன்றி மரண பயத்தோடு காடுகளுக்குள் காலத்தைக் கழித்த அநேகமான சிறுவர்கள், குழந்தைகள் இன்று நோய்வாய்ப்பட்டு நடைப்பிணங்களாக திரும்பி வந்திருக்கிறார்கள்.

தோட்டப்புறத் தமிழ் மக்கள் இவ்வளவு இன்னல்களையும் அடைவதற்கு காரணமாக அமைந்திருப்பது அவர்கள் தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரே காரணம்தான். 'அளுப்பொலை தோட்டலயம்களை தாக்கி தீயிட்டுக் கொளுத்திய சிங்கள இனவாதிகள் அங்கிருந்த ஒரே ஒரு கடையினை மாத்திரம் எதுவுமே செய்யாமல் மிகுதி வைத்திருக்கிறார்கள். தேடிப் பார்த்ததில் அது ஒரு சிங்களக் குடிமகனுக்கு சொந்தமான கடையென்றும் தெரியவந்திருக்கிறது. திட்டமிட்டே நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் மாலை 5 மணிக்கும், 7 மணிக்கும் இடையில் நடத்தப்பட்டிருக்கிறது.

தாக்குதல் முறைகள் அனைத்துத் தோட்டங்களிலும் கிட்டத்தட்ட ஒரே பாணியிலேயே இடம் பெற்றிருக்கிறது. இனவாதக் கும்பலொன்று தோட்டக் குடியிருப்புகள் மீது தாக்குதல் நடத்த முற்படுவதாகவும் பாதுகாப்புத் தருமாறும் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் சில இடங்களுக்கு ஏனோ தானோ என்ற வகையிலே தாமதமாகவே பொலிஸார் வந்திருக்கிறார்கள்.

பின்னர் அங்கு வந்து சேர்ந்த இராணுவத்தினரே நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தாக்குதலில் சம்பந்தப்பட்டு அடையாளம் காணப்பட்ட பல சிங்களவர்கள் பற்றி தகவல் கொடுத்தும் அவர்களை சட்டப்படி கைது செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளத் தவறிய பொலிஸார், இரண்டு சிங்களவர்களைக் கொன்றதாக சந்தேகத்தின் பேரில் 14 தமிழர்களை உடனடியாக கைது செய்திருக்கிறார்கள். தீவைப்பு தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட வெறியர்கள் குறிப்பிட்ட ஒரு 'பெரிய' புள்ளியின் ஆட்கள் என்ற ஒரே காரணத்தினால் அவர்களைக் கைது செய்ய பொலிஸார் தயங்குவதாகக் கூறப்படுகிறது. அரசியல்வாதிகள் தமது செல்வாக்கினையும் அரசியல் அதிகாரத்தினையும் பயன்படுத்தி சிங்கள இனவாதிகளைத் தூண்டிவிட்டு தமிழ் மக்கள் மீது அநியாயமான தாக்குதல்களைத் தொடுத்த சம்பவங்கள் பல கடந்த காலங்களிலே நிகழ்ந்திருப்பது யாவரும் அறிந்த விடயமேயாகும்.

சம்பவம் நடந்து முடிந்த பிறகு சாம்பல் மேடுகளாகக் காட்சியளித்ததோட்டக் குடியிருப்புகளையும், அகதிகளாக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் நிலையினையும் பார்வையிடுவதற்காக வருகை தந்த பெரிய 'புள்ளி' ஒருவர் எரிந்து நாசமாகியிருந்த குடிசைகளைப் பார்த்து ''இந்த பழையலயம் அறைகளுக்கு தீயிட்டது அவ்வளவு பெரிய ஒரு விடயமாக எடுக்க முடியுமா?'' என்று கூறினாராம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குறித்த சம்பவங்கள் தொடர்பாக தகவற்துறை ஊடகங்களும் குறுகிய மனப்பான்மையோடு ஒரு தலைப்பட்சமாகத்தான் செயற்பட்டிருக்கின்றன என்று கூறவேண்டும். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்த தகவற்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் செய்திப்பத்திரிகை நிருபர்களுக்கும்,அங்கு நின்ற பொலிஸார் தரும் தகவல்களைத் தவிர வேறு எந்த விபரங்களையும் அலசி ஆராய்ந்து உண்மை செய்திகளை தெரிந்து கொள்ளமுடியாமற் போனது துரதிருஷ்டம் என்றே கூறவேண்டும்.

குறிப்பிட்ட சம்பவம் பற்றி சிலபத்திரிகைகளில் திரித்துக் கூறப்பட்ட உண்மைக்கு மாற்றமான செய்திகளே பிரசுரமாகி இருந்தன.அ ரச தொலைக்காட்சி சேவையில் கூட பெயருக்கு எதையோ காட்டிவிட்டு, சிரித்த முகத்தோடு அகதிகளுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கும் அரசியல் முக்கியஸ்தர்களை படம் போட்டுக் காட்டினார்களே தவிர, எங்கு எரிந்து சாம்பல் .மேடாகக் காட்சியளித்த எண்ணூறுக்கும் மேற்பட்ட குடிசைகள், லயம் அறைகள் அவர்களுடைய எந்த கமெராவுக்கும் தென்படவில்லை போல் தெரிகிறது.

ஆனால் மாறாக தமிழர்கள் சிங்கள கிராமத்திற்குள் புகுந்து இப்படியான வெளியாட்டங்களை ஆடி தீவைப்புச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்தால் எமது தகவற்துறை சாதனங்களின் செயற்பாட்டினையும் மனித நேயத்தினையும் நன்கு காணக்கூடியதாக இருந்திருக்கும்.

இந்த இலங்கைத் திருநாட்டிலே,நேர்மையான மனிதர்களோ, பொதுக்கருத்துக்கொண்ட தகவற்தொடர்பு ஊடகங்களைச் சேர்ந்தவர்களோ, உண்மையாகவே மனித உரிமை பற்றி பேசுகின்றவர்களோ இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றிருந்தால், பொலிஸ் அதிகாரிகளைப் பின் தொடர்ந்து வராமல் தைரியமாக குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற இடங்களுக்கு வாருங்கள், திறந்த வெளி சிறைச்சாலைகளுக்கு நிகரான இந்த தோட்டலயம் குடியிருப்புகளிலே தமிழ் மக்கள் என்ன துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு அப்பொழுது தான் உங்களுக்கு ஏற்படும். அதுமட்டுமல்ல இந்தக் கொடூரமான வன்முறை இனவெறியாட்டத் தீவைப்புச் சம்பவத்தினால் இந்த தமிழ் மக்கள் பட்டுத்தீர்ந்த,படுகின்ற அவஸ்தைகள் கொடுமைகள், பட்டினியால், நோய் நொடிகளால் மாய்ந்து மடியும் தமிழ் குழந்தைகளின் விபரங்கள் என்பவற்றை எல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இல்லையேல் என்றாவது ஒரு நாள் அவர்கள் கொதித்தெழுந்து நாமும் உங்களைப் போன்ற மனித உயிர்கள்தான். எமக்கும் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழும் உரிமை இருக்கிறது. இந்த உரிமையை எமக்குத் தாருங்கள் என்றும் கேட்டு போராடத்தான் போகிறார்கள்.

நன்றி:- 'லக்பிம'

சிங்கள மூலம்: ஆனந்த ரஞ்சித்
தமிழில்: எம்.ஸீ.மொஹமட் அலி

# இரத்தினபுரி வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் புதைந்துள்ள காரணிகள் என்ன?

வீரகேசரி

## புதிய பாரதம்

இங்கு பணமே
பிரதானம் என்பதால்
உழுத்துப் போய்
உதிர்ந்து கொண்டிருக்கிறது
உண்மை என்கிற
உத்திரம்!
படமெடுத் தாடும்
நச்சுப் பாம்பாய்
நளினம் காட்டும்
நாகரீகம்!
விண்முட்டும் விஞ்ஞானம்
கூவமாய் பண்பாடு
பழ(ல) மரம் தேடும்
பறவையாய் அரசியல்!
மதத்தின் பெயரால்
மானிடக் கூட்டம்
திட்டுத் திட்டாய்
சாதிய மோதல்கள்
சல்லடைக் கண்ணாய்
மனித நேயம்!
மொ த் த த் தி ல்
பொன் விழா ஆண்டில்
எல்லாம் பொய்யாய்
இருந்தாலும்
எள்ளின் முக்களவு
எனக்கோர் நம்பிக்கை!
சுதந்திரத்தின் சுவடு
தெரியாமலேயே
உழைத்து உழைத்து
ஓடாய்ப் போன பாட்டாளியின்
விழிப்பிலே புதிய பாரதம்
பிறக்குமென்று!

புகழோன்
உசிலை

பாரதியின் கவிதாதேவி

## ஆமைகள்

தி.திலீபன்

ஆயிரம் ஆமைகள்
அகிலத்தில் உண்டு.
இரண்டு ஆமைகள்
வேண்டவே வேண்டாம்.

அறிவு என்பது எதையும் அறிவதால் வருவது
அறியாமல் இருந்தால் அறிவிலியல்ல!
அறிய மறுப்பவனே அறிவிலியாவான்.
நித்திரை போல் நடிப்பவனை எழுப்பிடலாமே?

எல்லாம் தெரியும் என்று ஒருகால்
மரியாதை மறந்ததோர் மறுகால்
மனிதம் என்பதை மறுக்கும் மூன்றாம் கால்
அறிய மறுக்கும் அறிவு நாலாம் கால்
உண்மையைப் பகுத்து உணர்ந்து
சமநிலை அடையா வாலைக்கொண்டு
வெறிகொண்ட தலையை வெளியே காட்டும்
அறியாமை இப்போ அசைந்து வருமே

தன்னைவிட ஒருவன் சிறந்து விட்டால்
தவறாமல் வருமே இவ்வாமை.
ஒவ்வாமையான பொறுமையிழந்த பொறாமை.

கிடையாமை என்னும் மனக்கிடக்கை ஒருகால்.
மடமை என்னும் மற்றதோர் மறுகால்
தாழ்வு மனம் கொண்ட மூன்றாம் காலும்
அமைதியை விரும்பா நாலாம் காலும்
உதைத்து நகர்வதே
பொறுமை இழந்த பொறாமை ஆகும்
அமைதி இழந்து,ஆத்திரம் கொண்டு
மனிதம் மறந்து,பொறுமை இழந்து
அறிவைத்தேடும்,ஆமையுமிதுவே

## முடங்கள்....!

காரையூரான் இ.தியாகலிங்கம்

என்மீதும் என் உறவு மீதும் ஆசை வைத்துக் கொள்பவன். வினி மீது ஆசையும் பாசமும் வைப்பானா? இது கேள்விக்குரியது. அதுவே கேலிக்குரியது ஆகக்கூடாது என்பதுதான் எனது பயம். அதுதான் என்னை ஆண்களிடமிருந்து தள்ளியே நிற்க வைக்கிறது. சரி ஒட்டித்தான் போனாலும் தாரம் இளந்தவளை , தாராமாக்கிக் கொள்பவர்கள் ஒன்றும் எங்கள் சமுதாயத்தில் தாரளமாய் இல்லை. ஒருசிலர் இருக்கிறார்கள்.

எங்களுர் வீரசிங்கம். அடிக்கடி போன் பண்ணிக் கதைக்கிறவர்தான். அவரை எனக்கு சின்னவளாய் இருக்கும் போது தெரியும். அவருக்கு மனைவியும் ஒரு பிள்ளையும் இருந்தனர். அவளை எனக்கு நன்கு தெரியும். கொழும்பிலே இங்கு வருவதற்கு வந்து நிற்கும் போது லொறி ஒன்றில் மோதி தலத்திலேயே போய் விட்டார்கள். அடிக்கடி புலம்புவார். தனக்கு நின்மதி இல்லை என அழுவார்.

நான் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் சொல்வதில்லை. சொல்லத் துணிவு இல்லை. ஆணாய் இருப்பவர்களில் எத்தனை பேருக்குத் துணிவு இருக்கிறது? சிலவேளை வினி யோடும் கதைத்து இருக்கிறார். அவளைப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுப் போட்டோவும் அனுப்பி வைத்தேன் . இன்னும் போன் எடுக்கவில்லை . எடுப்பார். எப்போது எடுப்பார் என்பது தெரியவில்லை.

வேதனை அதிகமாகும் போது விசுவின் எண்ணம் வரும். இப்போது சில வேளை இவரின் எண்ணம்கூட வருகிறது. ஏன் என்பது புரியவில்லை. அவரது இழகிய விசாரிப்பு காரணமாய் இருக்கலாம். அல்லது இளப்பின் பாரம் இருவரையும் இணைத்திருக்கலாம். எது எப்படி இருந்தாலும் நான் எதைப் பற்றியும் எந்த முடிவுக்கும் வரவில்லை. எனது இப்போதைய முடிவு வினிக்காக வாழ்வதே. அவளுக்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துக் கொடுப்பதே.

அம்மா அம்மா.
வினி கத்தினாள். எனது சிந்தனை கலைந்தது. நான் அவளை நோக்கி ஓடினேன்.
என்னவினி ?
என்னம்மா செய்யிறா ? பசிக்குது.
சாப்பாடு போட்டுக் கொண்டு வாறன்.
கெதியா வாம்மா.
ம்.........

நான் அவசர அவசரமாகச் சாப்பாட்டை பாத்திரத்திற்குள் போட்டேன்.

எனக்கு வீரசிங்கத்தின் எண்ணம் மீண்டும் வந்தது . அது அதிசயத்தை ஏற்படுத்தியது. என் பெண்மை இன்னும் படுத்துக் கொள்ளவில்லை. அது விழித்துக் கொண்டிருப்பதை அடிக்கடி நியாபகம் ஊட்டியது. இதை எண்ணும் போது சிரிப்பாகவும் இருக்கிறது. வேதனையாகவும் இருக்கிறது. விரகமும் தனிமையும் வேதனையானவை மட்டுமல்ல விசித்திரமானவையும்கூட.

## 5 வீரசிங்கம்.

அன்று திங்கள் . பாடசாலை முடிந்து வந்த வினி , வெளியே காற்று வீசியதால் , நகர மறத்து உள்ளே நான் வைத்திருந்த கணணியில் விளையாடிக் கொண்டிருந்தாள். இந்தக் கணணி இப்போது எனக்கு நல்ல துணையாகிவிட்டது. வினிக்கு அடுத்தது இதுதான் என்னோடு அதிகம் சேர்ந்திருக்கிறது. அவர் இருந்திருந்தால் மூன்றாவது இடம்தான் இதற்குக் கிடைத்திருக்கும். எனது உணர்ச்சிகளைக் கவிதைகளாக தனக்குள் வேண்டிக் கொள்கிறது. எனக்கு விளையாட்டாக இன்பம் தருகிறது. ஒருவகையில் அவரின் இழப்பை நிரப்ப முயலும் இச்சிறிய சாதனத்தில் எனக்கு அபாரப் பிரியம்தான். வருங்காலத்தில் இதுதான் மனிதர்களுக்கு முதல் காதலியாக, கத்லனாகப் பர்ணமிக்கப் போகிறதோ தெரியவில்லை.

எனது பிரியத்துக்குரிய கணணியை இன்று வினி ஆக்கிரமித்துக் கொண்டாள். அவளின் ஆக்கிரமிப்பால் பொழுது போகவில்லை என்றாலும் மனதில் அச்சம் இருக்கவில்லை. இவள் வெளியே சென்றால் இவளுக்கும் தனுவுக்கும் எப்போது சண்டை ஏற்படும் என்பதை யாரும் கூறமுடியாது. அந்த ஆபத்து இப்போது இல்லை என்பதே பெரும் நின்மதியாக இருந்தது.

பொழுது போகவில்லை. தொலைக்காட்சியை இயக்கினேன். அமெரிக்காவில் நேரடியாக எடுத்த தெருக் குற்றவாளிகளின் செய்கையையும் , காவலர்களின் வீரத்தனத்தையும் ஒரு அலைவரிசையில் ஒளி – ஒலிபரப்பிக் கொண்டிருந்தனர். அது கொஞ்சம் விறுவிறுப்பான நிகழ்ச்சி. சிறிது நேரம் அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மனது அதில் அவ்வளவாக லயிக்கவில்லை. என்ன செய்யலாம் என்பதும் புரியவில்லை. மற்றைய அலை வரிசைக்கு மாற்றினேன். அதில் உள்ளுர் செய்தி போய்க் கொண்டிருந்தது.

பாடசாலையில் வைத்த தேர்தலில் வெளிநாட்டவரை எதிர்க்கும் கட்சி நாற்பது சதவீத இடத்தைப் பிடித்திருந்தது. இங்கும் இப்போது அதிதீவிரமாக இனவெறி பரவிக் கொண்டு வருகிறது. இது எங்கு சென்று முடிவடையும் என்பதுதான் கேள்விக்குறியான ஒன்று. சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டிய அரசியல் வாதிகளே பதவிக்காக மக்களைத் தீய வழியில் இட்டுச் செல்லுகிறார்கள். எங்கள் நாட்டில் அல்ல உலகம் பூராகவும் இந்த வியாதி பரவித்தான் கிடக்கிறது. பிழை என்பது புரிந்தும் தங்கள் சுயநலத்திற்காய் மனச்சாட்சியை அடைவு வைத்துவிட்டு வேசையாடும் செய்கை இது. நித்திரை கொள்பவர்களை எழுப்பிவிடலாம். நித்திரை கொள்பது போல நடிப்பவரை எழுப்பிவிட முடியாது. இந்த அரசியல் வாதிகளும் தங்கள் அரசியலால் வரும் தீமை புரிந்தும் நித்திரை கொள்பவர் போல நடிக்கிறார்கள்.

சொந்தநாட்டில் இனவெறியூட்டும் இவ்வரசியல்வாதிகளுக்குப் பற்றோ, பக்தியோ, கிடையாது. இவர்களுக்கு பக்தி எல்லாம் பதவியில்தான். சிறுபிள்ளைகள் பொதுவாக சிந்திப்பதில் நிறையத் தவறு விடுகிறார்கள். அந்தப் பருவம் அறியாமையை களைய விரும்பி , ஆராய்வில் ஈடுபடும் பருவம். இந்தப் பருவத்தைத் தங்கள் அரசியல் சுயநலத்திற்குப் பாவித்துக் கொள்வது எவ்வளவு அயோக்கியத்தனம் என்பது புரிந்தும் பாவிப்பதுதான் அவர்களின் கோரத்திற்குச் சான்று. இந்த ஐயோக்கியரை நம்புவதுதான் அந்த அறியாத பிஞ்சுகள் செய்யும் அவலம்.

உள்ளுர் செய்தி முடிந்ததுவிட்டது. தற்போது ஏழுமணி . செய்திகள் ஒளிபரப்பப்பட்டுக் கொண்டு இருந்தது. என்ன சொல்லுகிறார்கள் என்று அவலோடு காத்துக் கொண்டு இருக்கும் போது எனது அவலை எல்லாம் தகர்த்து எறிவதுபோல தொலைபேசி மணி ஒலித்தது. சிலர் செய்தி சொல்லும் போதுதான் தொலைபேசியில் தொடர்பு

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
பன்னாட்டு,தமிழ்எழுத்தாளர்,கல்லூரி,பொது நூலகங்கள் ,அரசியல்கட்சிகள்,சங்கங்கள்,பத்திரிகைகட்கு இலவசசந்தா உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழருக்கு சந்தாதந்தோர்க்கு இதயபூர்வநன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து ஆதரவு தருக !
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

கொள்பார்கள். அப்போது அதிக சினம்தான் உண்டாகிறது. இப்போது எனக்கு அதிக சினம் உண்டாகவே சென்று தொலை பேசியை எடுத்தேன்.

கலோ?

கலோ? நான் வீரசிங்கம்.

தொலை பேசிய எடுக்கும் போது இருந்த கோபம் இப்போது பனியாக மாயமாகியது. ஏன் என்பது என்க்குப் புரியாத விந்தையாக இருந்தது. இந்தத் தொலைபேசியை கையில் எடுத்துச் செல்லலாம். இது ஒரு கம்பி இணைப்புகள் அற்ற தொலை பேசி. நான் அதை மெதுவாக எடுத்துக் கொண்டு சமையல் அறைக்குச் சென்று , கதவை மெதுவாகச் சாத்தினேன். என் இந்தச் செய்கைக்கு எனக்கு விளக்கம் தெரியவில்லை. காதலும் ஒருவித களவாகத்தான் இருக்க வேண்டும். அது அதிகமாக மனதில் கிலேசத்தையும், களவையும், மர்மத்தையும் உண்டு பண்ணுகிறது. நாங்கள் செய்வதை மறைக்கத் தோன்றுகிறது. அப்படி என்றால் எனக்கு வீரசிங்கம்மீது காதலா?. சீ பைத்தியமே. என்னை நானே திட்டிக் கொண்டேன். எப்படி முட்டாள்தனமாய் எல்லாம் சிலவேளைகளில் சிந்திக்கிறேன். எனது மௌனத்தை வீரசிங்கமே குலைத்தார்.

என்ன பேசாமல் நிக்கிறியள்.

நீங்கதானே போன் எடுத்தியள் அப்ப நீங்கதான் பேசோணும்.

ம்...................

என்ன பெருமூச்சு விர்றியள்.

பேச நிறைய விசயம் இருக்கு . எத எப்பிடி பேசுறதெண்டுதான் தெரியேல்ல.

ஏதோ கனக்கச் சுத்துறியள் . நேர விசயத்துக்கு வாங்க.

வந்தா நீங்க அதிர்ச்சி அடைய மாட்டியளே?

அதெல்லாம் தாண்டித்தானே உயிரோட இருக்கிறன். இல்லாட்டி என்ர விசுவப் பிணமாத் தூக்கியந்தும் உயிரோட இருந்திருப்பனே?

எனது குரல் உடைந்தே வந்தது.

சொறி செவ்வந்தி . நான் இத மீன் பண்ணல்ல.

தெரியும் . எனக்குத்தான் மனசு கேள்க்குதில்ல.

பழச மறக்கோணும் செவ்வந்தி . அப்பதான் நின்மதியா இருக்கலாம். அதுதான் உன்ர கவிதை ஒண்டில எழுதி இருக்கியே , உலகம் யாருக்காகவும் தான் தயங்கி நிக்கிறேல்ல எண்டு.

உண்மதான்.

அப்பேன் பழசத் திரும்பத்திரும்ப யோசிச்சு மனசக் குளப்பிறியள்?

இப்பிடி யெல்லாம் செய்யக் கூடாதுஎண்டு நினைக்கிறதுதான். ஆனா சிலவேள என்ன அடக்க முடியிறேல்ல. அது என்ர பலவீனம்.

நானும் உன்னமாதிரி வேதனைய அனுபவிச்சனான்தான். ஆனா அதுதான் வாழ்கையின்ர முடிவு எண்டு நான் நினைக்கேல்ல. யாருடைய வாழ்கையும் வேற யாருடைய வாழ்கையின்ர முடிவோட நிரந்தரமா ஸ்தம்பிக்கிறேல்ல. கமோன் . நடந்ததை மறக்கிறத தவிர வேற வழியில்ல.

நீங்க ஆம்பிள லேசா சொல்லீட்டியள் நான் அப்பிடியே?

டாமிட்.

...............

சொறி.

பறுவாய் இல்ல.

ஆம்பிளைக்கு இருக்கிறது மனசில்லையோ? இல்லாட்டி ஆம்பிள மனசில அன்பில்லையோ? ஏன் அப்பிடி நினைக்கிறா? பெண்களின்ர உரிமைய பெறோணும் எண்டு உலகளாவிய ரீதியில மாநாடெல்லாம் நடக்கிற இருபத்தோராம் நூற்றாண்டில வசிக்கிறது நியாபகம் இருக்கோ?

இருக்கு இருக்கு.

இருந்து கொண்டு இப்பிடிக் கதைக்கிறியளே?

எப்பிடி எண்டாலும் நான் பெண்தானே?

திரும்பவும் அதே இடத்துக்கு வாறியள்.

இல்ல. நீங்க பெண்ணா இருந்தாத்தான் இதை உண்மையா விளங்கிக் கொள்ளலாம்.

சாத்தியப்படாத ஒண்டைச் சொல்லுறியள்.

அப்பிடித்தான் இதுவும்.

எது?

அவர மறக்கச் சொல்லுறது. ( நான் சிந்தித்ததிற்கு எதிரான வார்த்தையாக இருந்தது)

மறந்தாகோணும் செவ்வந்தி. நீர் என்ன இப்பிடியே இருந்திட முடியுமோ?

இருந்தா என்ன? எனக்கு வினி இருக்கிறாள். அவர்ற்ற நியாபகம் இருக்குது.

எனது இரட்டை வேடம் எனக்கே வெறுப்பைத் தந்தது. அடிமனதில் இருப்பது இதுவல்ல இதுவல்ல என என் மனச்சாட்சி சத்தமிட்டுக் கொண்டே இருந்தது. விசுவின் நியாபகத்தை மறக்க முடியவில்லை என்றாலும் புதுவாழ்வொன்றைத் தட்டிக்கழிக்கும் முட்டாள் அல்ல நான்.

அப்ப எனக்கு ஒருத்தரும் இல்லை எண்டுறியளோ.?

ஐயோ நான் அப்பிடிச் சொல்லேல்ல.

அப்ப அதுகின்ர அர்த்தம் என்ன?

அது வாய் தவறி உளறீட்டன். உங்களுக்கு நான் ஆறுதலுக்கு இருக்கிறனே.

உளறிவிட்டதாய் கூறிக் கொண்டே மீண்டும் உளறினேன். என்தவறு எனக்குப் புரிய எனது நாக்கைத்தான் என்னால் கடிக்க முடிந்தது. உமிழ்த்த சொல்லை மீட்க முடியுமோ ? முடிந்திருந்தால் உலகத்தில் நிறையப் பிரச்சனைகள் ஏற்படவே வாய்ப்புகள் இருக்காது. அவர் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். விட்டால்ச் சந்தர்ப்பம் விரைவாக வாராது என்பது அவருடைய எண்ணமாய் இருந்திருக்கலாம்.

இப்ப சொன்னது உழறல் இல்லையே?

எது?

எனக்கு நீங்கள் இருக்கிறதெண்டு சொன்னது.

ம்........ஆறுதலா இருக்கிறதெண்டு சொன்னது.

ஆறுதலா எண்டா எந்த வகையில ஆறுதலா இருப்பியள்?

எந்த வகையில இருக்கோணுமாம்?

சொன்னா செய்வியாளா?

ம்...........................?

ஏன் பேசிறியள் இல்ல?

சொன்ன பிறகுதான் முடிவு செய்யலாம்.

காதலுக்கு , அன்புக்கு , பருவ அவஸ்தைக்கு எல்லாம் மொட்டாக்குப் போட்டு மூடேலாது செவ்வந்தி.

ம்.. புரியுது.

பிறகெதுக்கு எங்களுக்கிடையில இந்த மழுப்பல் , இழுப்பல் எல்லாம்?

நான் பெம்பிள.

ச் திரும்பவும் அந்த இடத்துக்கு வாறிரே?

அப்ப என்ன செய்யோணும் எண்டுறியள்?

ஒஸ்லோவுக்கு இடம்மாறி வாங்களேன்.

ஐயோ......?

என்ன ஐயோ?

எடுத்த எடுப்பிலேயே அப்பிடிச் செய்ய முடியுமே?

அப்ப எப்ப இங்க வரப்போறியள்?

ஒரு இரண்டு வருஷம் போகட்டன்.

ஏய் செவ்வந்தி எதுக்குப் பயப்பிர்றா?

எங்கட ஊர் ஆக்கள் எல்லாம் உங்க இருக்கினம்.

சோ...................வட்? (வளரும்...)

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம்
/யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள்(பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை),புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேசதமிழர்:ஈழத்தமிழர்கருத்துக்கணிப்பு-1999

1. இலங்கையில் தமிழர்களின்,மனிதஉரிமைகள் மோசமாக,அரசபடைகளால் மீறப்படுகிறதா? ஆம்-இல்லை
2. கொழும்பில் தமிழர்களின் கைதும்,சிறைவைப்பும் மனிதஉரிமையை,மிகமீறுவதாக உள்ளதா? ஆம்-இல்லை
3. வடகிழக்கில் அரச சிங்களப்படைகளின் முற்றுகை,போர் நியாயமானதா? ஆம்-இல்லை
4. வடகிழக்கில் அரசபடை கைப்பற்றிய பகுதியில் மக்கள் திருப்தியுடன் உள்ளனரா? ஆம்-இல்லை
5. வடகிழக்கில் கைதானோர்,காணாமல்போனோர் பற்றி சர்வதேசகமிசன் அவசியமா? ஆம்-இல்லை
6. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் தமிழர்கள் திருப்தியுடன் உள்ளனரா? ஆம்-இல்லை
7. அரசமுப்படைகள் சகலஇனங்களையும் சரியானவிகிதாசாரத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகிறதா? ஆம்-இல்லை
8. போரைத்தொடர்வதால் இலங்கைஅரசு:சிங்களமக்கள்:அரசபடைகள் நன்மைபெறுவரா? ஆம்-இல்லை
9. போரைத்தொடர்வதால் விடுதலைப்புலிகள் தம்நோக்கில் வெற்றிபெறுவார்களா? ஆம்-இல்லை
10. சர்வதேசரீதியில் இலங்கையரசின் புலிகளுக்கெதிரான பிரசாரம் வெற்றிபெற்றுள்ளதா? ஆம்-இல்லை
11. சர்வதேசரீதியில் புலிகளின் தமிழீழஆதரவு பிரசாரம் வெற்றி தந்துள்ளதா? ஆம்-இல்லை
12. அரசின் தீர்வுப்பொதி தமிழர்கட்கு அரசியல்தீர்வுநம்பிக்கையை ஊட்டுகிறதா? ஆம்-இல்லை
13. இன்று வடகிழக்கில் தேர்தல் நடந்தால் உங்கள்தெரிவு எந்த இயக்கம், கட்சிக்கு?
14. வடகிழக்குக்கு வெளியே தற்போது தமிழ்பேசும்மக்களின் நம்பிக்கைக்கு உரிய கட்சிகள்,இயக்கங்கள்?
15. 1948-98 காலப்பகுதியில் மலையகமக்கள் வாழ்வு முன்னேற்றம் கண்டுள்ளதா? ஆம்-இல்லை
16. 1948-98அரசியல் அனுபவஅடிப்படையில் எந்த தமிழர்கட்சி,இயக்கங்கள் தாமாகவே கலைக்கப்படல் நலம்?
17. தமிழர்கட்கு மன்னிக்கமுடியாத துரோகம் செய்த கட்சிகள்,இயக்கங்கள் என எவற்றைக் கருதுகிறீர்கள் ?
18. தமிழர்விடுதலைக்கூட்டணி உடனடியாகப்புனரமைப்புச்செய்யப்படவேண்டிய நிலையிலுள்ளதா? ஆம்-இல்லை
19. தமிழர் விடுதலைக்கூட்டணி பழையதலைமை, இளம்தலைமுறைக்கு வழிவிடல்அவசியமா? ஆம்-இல்லை
20. தமிழ்பேசும்மக்களணி-எனும்,அணியில் சகலதமிழ்பேசும்கட்சிகளும் இணைவது அவசியமா? ஆம்-இல்லை
21. விடுதலைப்புலிகள் தமிழர் சனநாயகஅமைப்புகளுடன் ஒரு புரிந்துணர்வுக்கு வருவது அவசியமா? ஆ-இ
22. இலங்கையில் எந்த கட்சிகள்,இயக்கங்கள் மனிதஉரிமைமீறலை மிகமோசமாகசெய்துள்ளன?
23. தமிழ்கட்சிகள்,இயக்கங்களில்,கொள்கை,நேர்மை,திறமை,அஞ்சாமை,சுயநலமற்ற,தூரநோக்குள்ள தலைவர்கள்?
24. 1948-98காலத்தில் தூரநோக்கும்,பரந்தநோக்கும்,இனப்பாகுபாடற்றபண்பும் உள்ள சிங்களதலைவர்கள் யார்?
25. 1948-98காலத்தில் சிங்களஅரசு,நிர்வாகயந்திரம்,முப்படைகள்,பௌத்தபிக்குகள் சிறுபான்மையரை மதித்தனரா?
26. பௌத்தமதசிந்தனைகள் பெரும்பான்மையர் மத்தியில் மனிதநேசத்தை இதுவரை வளர்த்துள்ளதா? ஆ-இ
27. அதிபர் சந்திரிகாவின் போக்கு பழைய சிங்களத்தலைவர்கள் போலவே பேரினவாதமாகவே உள்ளதா? ஆ-இ
28. வடகிழக்கில் தமிழ்ஈழம் அமைப்பது தான் தற்போது பிரச்சனைக்கு ஒரேயொரு தீர்வாக உள்ளதா? ஆ-இ
29. அதிபர் சந்திரிகாவும்,விடுதலைப்புலிகளின் தலைவரும் 3வது நாட்டு மத்தியஸ்தத்துடன் உடன் பேச்சுவார்த்தைக்கு வருவதுதான் எதார்த்தரீதியான நீதி,அமைதியை இலங்கைக்கு அளிக்குமா? ஆ-இ
30. இன்னமும் இலங்கைமக்கள் சகலர்க்கும் உண்மையான சமாதானமும்,மகிழ்ச்சியையும் தரக்கூடியவல்லமையும்,சந்தர்ப்பமும் அதிபர் சந்திரிகாவுக்குண்டா? ஆம்-இல்லை

**ஆய்வில் பங்குகொள்வோர் ஒருதாளில், இலக்கம்-பதில் மட்டும் எழுதுக!ஆய்வறிக்கை சர்வதேச தமிழர் சஞ்சிகையில் வெளியாகும்.ஆய்வில் பங்குகொள்வோர்க்கு சஞ்சிகை (பெயர், முகவரி தருக) இலவசம்!**

**Editor/Publisher: N.S.PIRABU B.Sc.,Dip.Jour,SARVADESA TAMILER, L.Hervigsv69A,3035Drammen,Norway,Tel.Fx:32.813416(nsp@c2i.net)**



தமிழர்வீரத்தை இன்றும் பறைசாற்றும் ஜலலிக்கட்டு
தகவல்:இரா.இரவி, புகைப்படம்:பிரபாகரன்-மதுரை

www.tamilarangam.net

## உள்ளூராட்சி-பிராந்தியஅமைச்சு சம்பளநிச்சயஒழுங்குமுறையில் மாற்றங்கள்

1.தை.1999 இலிருந்து பின்வரும் மாற்றங்கள் நடைமுறைக்கு வரும்;

-காலாவதியான சம்பளநிலுவையை பெறும்அனுமதி,முடிவுநாளுக்குமுன்பு,4மாதநிலுவையை கருதக்கூடியதாய் நீடிக்கப்பட்டுள்ளது.

- தொழில்பெறுனர்அமைப்புகள், திவால்முறையீட்டில் அல்லது நிலுவைஅறவிடல் தொடர்பாய் ஒரு தொழிலாளியின் சார்பில் ஏற்பட்ட செலவீனங்களை பெறமுடியும்.

இதுபற்றியும்,வேறு நடைமுறைப்படுத்தப்படும் மாற்றங்கள் பற்றியும் மேலதிக தகவல்கள், பெற தொடர்புறுக:

**தொழில்மேற்பார்வை இயக்குனர்,**
**த.பெ.8103டெப்,0032 ஒஸ்லோ தொ.பே.:22957000**

அல்லது: **உள்ளாட்சி-பிராந்திய அமைச்சு,**
**த.பெ.8112டெப்0032 ஒஸ்லோ தொ.பே.:22246901**

சட்டமூலம்,புதிய சட்டவிதிகள் கொண்ட வழிகாட்டிகோவையை பெற தொடர்புறுக:

**ரீடன் நொஸ்க் போர்லாக்,த.பெ.8813,யுங்ஸ்தோர்கத்,0028ஒஸ்லோ**
தொ.பே.22007101 தொலைநகல்:22007139 மி.அ.:kundeservice@tiden.no

அரசதகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ29-98

KOMMUNAL- OG REGIONALDEPARTEMENTET

### Endringer i lønnsgarantiordningen

Med virkning fra 1 januar 1999 skjer det bl a følgende endringer:

- Dekningsadgangen for forfalte lønnskrav utvides til å omfatte krav med forfall inntil 4 måneder før fristdagen.
- Arbeidstakerorganisasjoner kan få dekket omkostninger de har hatt på vegne av en arbeidstaker i forbindelse med en konkursbegjæring eller inndriving av krav.

Nærmere opplysninger om disse og de øvrige endringene som gjennomføres, kan fås ved henvendelse til:
Direktoratet for arbeidstilsynet,
Postboks 8103 Dep, 0032 OSLO, tlf: 22 95 70 00
eller hos:
Kommunal- og regionaldepartementet,
Postboks 8112 Dep, 0032 OSLO,
tlf: 22 24 69 01.

Veiledningshefte med lovtekster og ny forskrift kan fås ved henvendelse til Tiden Norsk Forlag, Postboks 8813 Youngstorget, 0028 OSLO, tlf: 22 00 71 01 – faks: 22 00 71 39
e-post: kundeservice@tiden.no

Innrykket av Statens informasjonstjeneste A-29/98



1999 சந்தாப்பணம் கட்டி,தொடர்ந்து சஞ்சிகைக்கு ஆதரவுதரும்படி வேண்டுகின்றோம்!நன்றி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நீதி-காவல்துறை அமைச்சு

## பங்குநிறுவனங்கள்,பொதுபங்குநிறுவனங்கள் பற்றிய புதிய சட்டங்கள்

**1.தை.1999 இலிருந்து செல்லுபடியாகும்.**

1.தை.1999 இலிருந்து புதிய பங்குசட்டமும்,புதிய பொதுபங்கு சட்டமும் நடைமுறைக்கு வரும்.

புதிய பங்குசட்டத்தில்,பங்குமுதலின் அளவின் தேவை 50.000 குரோணரிலிருந்து, 100.000குரோணராக உயர்த்தப்பட்டுள்ளது.

இதன் கருத்து, 1.1.1999ன் பின் நிறுவப்படும் பங்குநிறுவனங்கள்,குறைந்தது 100.000குரோணர் பங்குமுதலுடனேயே தொடங்கப்படலாம்.இந்த காலப்புள்ளிக்கு முந்தி தொடங்கப்பட்ட நிறுவனங்கள் தம் பங்குமுதலை 1.தை.2000 க்கு முன்பாக குறைந்தது 100.000 குரோணராக உயர்த்திக் கொள்ளவேண்டும்.

இந்த புதிய சட்டங்கள் பல, முக்கிய, பங்குநிறுவனங்கள்,பொதுபங்குநிறுவனங்கள் குறித்த மாற்றங்களை கொண்டுள்ளன.

நீதிஅமைச்சு இந்த புதிய பங்குசட்டம் பற்றிய பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இப்பிரசுரத்தை புரொணொய்சுண்ட் பதிவிலிருந்து பெறலாம்.தொ.பே.:75007500 அல்லது நார்விக் தொலைபேசிகள்:தொ.பே.:80033840 இலிருந்தும் பெறலாம். இன்ரநெற்றிலும் பிரசுரத்தைக் காணலாம்.http://odin.dep.no/jd/publ/aksjelov

-அரச தகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ.22.98

---

JUSTIS- OG POLITIDEPARTEMENTET

### Nye lover om aksjeselskaper og allmennaksjeselskaper

**gjelder fra 1. januar 1999**

Den nye aksjeloven og den nye allmennaksjeloven trer i kraft 1. januar 1999.

I den nye aksjeloven heves kravet til aksjekapitalens størrelse fra kr 50.000 til kr 100.000. Dette betyr at aksjeselskaper som stiftes etter 1. januar 1999, må stiftes med en aksjekapital på minst kr 100.000. Selskaper som er stiftet før dette tidspunktet, må heve sin aksjekapital til minst kr 100.000 før 1. januar 2004.

De nye lovene innebærer flere viktige endringer for aksjeselskaper og allmennaksjeselskaper.

Justisdepartementet har utarbeidet en brosjyre om den nye aksjeloven. Brosjyren kan du få hos Brønnøysundregistrene, tlf. 75 00 75 00, eller Narviktelefonene, tlf. 800 33 840. Du finner også brosjyren på Internett: http://odin.dep.no/jd/publ/aksjelov

Innrykket av Statens informasjonstjeneste A-22/98

Sarvadesa Tamiler er utgitt av støtte fra Kulturdepartementet,og Utenriksdepartementet i 1998 (Tema:Om harmonisk verden-Før,nå,framtiden)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**C-BLAD**
**SARVADESA TAMILER**
Etbl.1994
Abonnement:90-kr/år Giro:05320899453

**Redaktør:**
N.S.Pirabu,B.Sc.,Dip.Jour.U.K
L.Hervigsv.69A
3035 Drammen,Norway

Norges Tamilskblad for informasjon,kunnskap,kultur, fred,framgang og solidaritet! Vol.5 Nr.8

# இளைஞர்கட்கான ஐரோப்பிய தொண்டர்-சேவை

அரச இளைஞர்-சுவீகார அலுவலகம் உள்ளுர் தொண்டர்சேவை செயல்திட்டங்கட்கு, ஐரோப்பிய யூனியன் நிதியுதவியை பரிவர்த்தனை செய்யும்.

**இச்சேவை ஒருவகையான கல்வி,பயிற்சிநெறியாகும்**

வேறொரு ஐ.யூ. அல்லது ஐ.பொ.ஒ. நாட்டில் 18-25 வயதுக்குட்பட்ட இளைஞர்கட்கு வழங்கப்படும் தொண்டர்சேவையே ஐரோப்பிய தொண்டர்சேவை திட்டமாகும்.

இச்சேவை ஒரு தொழிலல்ல,ஒருவகையான கல்வி,பயிற்சிக்கான மாற்றுவடிவம். அதேசமயம் ஐரோப்பியதொண்டர்சேவை நோர்வேயிலுள்ள வர்த்தகநோக்கற்ற அமைப்புகள்,உள்ளுர்சேயல்திட்டங்கட்கான தொண்டர்சேவைக்கு இளைஞரை அனுப்பவும்,பெறவுமான ஒரு சேவையாகும்.

**அரச இளைஞர்-சுவீகாரஅலுவலகம் நிதியுதவியை பரிவர்த்தனைசெய்வது:**

**உபசரணை செயல்திட்டங்கள்:**

அமைப்புகள்,கொம்யூன்கள்,கழகம்,சங்கங்கள்,மற்றும் வர்த்தகநோக்கற்ற அமைப்புகள் 6-12.மாத அல்லது 3கிழமை-3மாதம்,வெளிநாட்டுஇளைஞர்களை ஏற்றுக்கொள்ளும் தொண்டர்சேவைக்காக நிதியுதவிக்கு விண்ணப்பிக்கலாம்.ஐ.யூ. உபசரணை செயல்திட்டங்கட்கு திட்டசெலவின் 50வீதம் நிதிஉதவி செய்யும்.

**அனுப்பு செயல்திட்டங்கள்:**

அமைப்புகள்,கொம்யூன்கள்,கழகம்,சங்கங்கள்,மற்றும் வர்த்தகநோக்கற்ற அமைப்புகள், தொண்டர்சேவைக்காக இளைஞரை வேறு ஐ.யூ.,ஐ.பொ.ஒ. நாட்டுக்கு அனுப்ப நிதியுதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

ஐ.யூ., அனுப்புதிட்டங்கட்கு,தொண்டரின் பிரயாணம்,காப்புறுதிசெலவுகளை 100வீத நிதியீடு செய்யும்.

**ஐரோப்பிய தொண்டர்சேவை 5 பிரிவு செயல்திட்டங்களை கொண்டது:**

**இருபக்க செயல்திட்டங்கள்:** 6-12.மாத நீண்டகால தொண்டர்சேவை; 3கிழமை-3மாதமான குறுங்கால தொண்டர்சேவையை கொண்டது.

**பலபக்க செயல்திட்டங்கள்:** தொண்டர்களை தம்முள் பகிர்ந்துகொள்ளும் பல திட்டநாடுகளின் பங்கேற்போர், பங்கேற்பர்.

**மூன்றாம்நாடு:** ஐ.யூ. ஐ.பொ.ஒ.நாடுகட்கு வெளியேயுள்ள நாடுகளுடனான செயல்பாடுகள்.

நோர்வேயிலிருந்து தொண்டர்களை இங்கிருந்து அனுப்பமுடியுமே தவிர,அங்கிருந்து ஏற்க முடியாது.

**விசேட தேசிய நிகழ்வுடன் தொடர்பான செயல்திட்டங்கள்:**பல தொண்டர்கள் மிகப் பிரபலமான தேசியநிகழ்வில் இணைக்கப்படல்.

**எதிர்கால தகைமை:**தொண்டர்சேவைக்காலத்தை முடித்த தொண்டர்கட்கு பின்தொடர்செயல்திட்டங்கள்,பயிற்சி அல்லது கல்விக்கு நிதியுதவி வழங்கல்.

**முடிவுதேதி: 31தை1999** மேலும் தகவல்பெற தொடர்புறுக: அரச இளைஞர்-சுவீகார அலுவலகம்
த.பெ.8036டெப், 0030 ஒஸ்லோ, தொ.பே.22242591, தொ.ந: 22249523 மி.அ.:evs@suak.dep.telemax.no
Internett:**http://www.suak.no** அரச தகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ.28-98

# Europeisk volontør-tjeneste for ungdom

Statens ungdoms- og adopsjonskontor (SUAK) formidler EU-støtte til frivillig arbeid i lokale prosjekter.

**Tjenesten er en form for utdanning og opplæring**

Programmet Europeisk volontør-tjeneste for ungdom er et tilbud til ungdom i alderen 18 -25 år om frivillig arbeid i et annet EU-/EØS-land. Tjenesten er ikke arbeid, men en alternativ form for utdanning og opplæring. Europeisk volontør-tjeneste er samtidig et tilbud til norske ikkekommersielle strukturer om å sende ut eller ta imot en ungdom i frivillig arbeid i lokale prosjekter.

**Statens ungdoms- og adopsjonskontor formidler støtte til**

- **Vertsprosjekter:** Organisasjoner, kommuner, lag, foreninger og andre ikkekommersielle strukturer kan søke om støtte til å ta imot utenlandsk ungdom for frivillig arbeid under en periode på 6 til 12 måneder, alternativt 3 uker til 3 måneder. EU støtter vertsprosjekter med opp til 50 % av prosjektets kostnader.
- **Senderprosjekter:** Organisasjoner, kommuner, lag, foreninger og andre ikkekommersielle strukturer kan søke om støtte til å sende ut volontører for frivillig arbeid i et annet EU-/EØS-land. EU støtter senderprosjekter med 100 % finansiering av kostnader for volontørens reise og forsikring.

**Europeisk volontør-tjeneste består av 5 delprogrammer**

**Bilaterale prosjekter** – som omfatter langvarig volontør-tjeneste, perioder på 6 til 12 måneder, og kortvarig volontør-tjeneste, perioder på 3 uker til 3 måneder.

**Multilaterale prosjekter** – involverer deltakere fra forskjellige programland som utveksler volontører seg i mellom.

**Tredjeland** – aktiviteter sammen med tredjeland, dvs. land utenfor EU/EØS. *Det er anledning til å sende ut volontører fra Norge, men ikke å ta imot.*

**Prosjekter tilknyttet spesielle nasjonale arrangementer** – flere frivillige som er knyttet sammen i et høyt profilert nasjonalt arrangement.

**Fremtidskompetanse** – støtte til oppfølgingsprosjekter, opplæring eller utdanning for volontører som har avsluttet en volontør-periode.

**Søknadsfrist: 31. januar 1999**

For mer informasjon, ta kontakt med
Statens ungdoms- og adopsjonskontor
Postboks 8036 Dep, 0030 Oslo
Tlf: 22 24 25 91
Faks: 22 24 95 23
E-post:
evs@suak.dep.telemax.no
Internett: http://www.suak.no

Innrykket av Statens informasjonstjeneste A-28/98